IHRA

UNIVERSITY OF COLOMBO

# මානව සම්පත් අභිවර්ධන ආයතනය
## කොළඹ විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව

## වාර්ෂික වාර්තාව සහ වාර්ෂික ගිණුම්
## 2017

# மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
## கொழும்புப் பல்கலைக்கழகம், ஸ்ரீலங்கா

## ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள்
## 2017

# INSTITUTE OF HUMAN RESOURCE ADVANCEMENT
## *University of Colombo,* Sri Lanka

## ANNUAL REPORT AND ANNUAL ACCOUNTS
## 2017

# மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

# வருடாந்த அறிக்கை - 2017

### நோக்கு

எங்கள் தேசிய அபிவிருத்தியின் மனித அத்திவாரத்தை வலுவூட்டும் முதிர்ந்த, விவேகமுள்ள “அறிவுசார் பயனர்களாக” பூகோள நிலைமைகளின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றல் படைத்த மனித வளத்தினை மேம்படுத்துவதற்கு முழுவதுமாக அர்பணிக்கப்பட்ட சால்புமிகு நிறுவனமாகத் திகழ்வதாகும்.

### பணி

தொழில் புரிவோர், தொழில் வழங்குனர்கள், மற்றும் தொழில் முனைவோர் ஆகியோரைக் கொண்டுள்ள சகல ‘‘உழைத்தலும் கற்றலும்’’ வேலை - குழுக்களின் ஆற்றல்களை மேம்படுத்தி மொத்தத் தர முகாமைத்துவச் செயல்முறைகள் ஊடான விரிவான உயர் - மட்டக் கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கு வசதியளித்தல்.

நெறிமுறைசார் செந்தரங்கள், தொழில் முனைவுத் திறன்கள், தலைமைத்துவப் பண்புகள், மற்றும் தமது பொறுப்புக்களையும் உரிமைகளையும் புரிந்து கொள்ளல் ஆகிய ஒன்றில் ஒன்று சார்ந்துள்ள திறன்கள் உட்பட அவர்களின் பகுப்பாய்வு மற்றும் நுண்ணாய்வுச் சிந்தனைத் திறன்களை மேம்படுத்த மேலும் வசதியளித்தல்.

தேசத்தினது ‘‘அறிவுப்- பொருளாதாரத்திற்கு’’ பயனுறுதியானதொரு பங்களிப்பினைச் செய்யும் மேம்பட்ட மனித வள உருப்பொருள் தொகுதியாக ‘‘அறிவுத் தொழில்’’ குழுக்களை உருவாக்க முயலுதல்

### விழுமியங்கள்

- *புதுமையான நிறுவனம்*
- *இலங்குகளை அடைவதற்கான அர்ப்பணிப்பு*
- *விடயத் துறைகளின் பன்முகத்தன்மை*
- *ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கலாச்சாரம்*
- *நம்பகத்தன்மை*
- *பொறுப்பும் பொறுப்புச்கூறும் கடப்பாடும்*
- *ஒற்றுமை*
- *சம வாய்ப்புக்கள்*

## பணிப்பாளரின் மீளாய்வு



*நாம் எமது சமுதாயம் முன்னேற முடியும் முன்னேற வேண்டும் என நம்புகின்றோம். நாங்கள் தேடுகின்ற முன்னேற்றம் தொடர்ச்சியானதும் படிப்படியானதுமாகும். நமது இலக்காகிய முன்னேற்றம் எமது சொந்தப் பொருளாதார, சமூக, பண்பாட்டு மற்றும் அரசியல் அபிலாசைகளின் முழுமையான தழுவலாக இருக்கும். ஒரு முற்போக்கான சமுதாயம் அந்த சமுதாய மக்களின் சமூக, பண்பாட்டு, மற்றும் அரசியல் அபிலாஷைகளை அந்த சமுதாயத்தின் ஒரு யதார்த்தத்தினை உருவாக்குகின்ற சமூகமாகும் என நாம் நம்புகின்றோம்.*

2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். கூறப்பட்ட காலப்பகுதியில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் கல்வியின் அனைத்துப் பரப்புகளிலும் சான்றிதழ் மட்டங்களில் இருந்து பட்டப்பின் மட்டங்கள் வரை பரந்த அளவிலான நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கி வரும் ஒரு முன்னணி கல்விசார் நிறுவனமாக தேசத்திற்குத் தொடர்ந்து சேவையாற்றி வருகின்றது. கூறப்பட்ட ஆண்டில் குறிப்பிடத்தக்கது என்னவெனில் கல்விசார்ந்த குழுவின் நெறிப்படுத்தலுடன் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை மறுசீரமைப்பதற்கு எடுக்கப்பட்ட முன்னெடுப்பாகும்.

2017 ஆம் ஆண்டு ஐர்சுயு இன் தொடர்ச்சியான வளர்ச்சியைக் குறிக்கும் பல குறிப்பிடத்தக்க சாதனைகளை குறிக்கின்றது. முதலில் ஐர்சுயு அதன் கட்டளையை திருத்தியது. இரண்டாவதாக அது அதன் பட்டப்பின் படிப்பு பாடத்திட்டங்கள் உள்ளடங்கலாக உபவிதி மற்றும் ஒழுங்குவிதிகளை திருத்தி பேரவையின் அங்கீகாரத்தையும் பெற்றது. இந்த மாற்றங்களுடன் பட்டப்பின்படிப்பு மற்றும் ஆராய்ச்சி தொடர்பான கற்கைச்சபை, மற்றும் இளமாணிக் கற்கைநெறிகள் தொடர்பான கற்கை சபைகள் போன்றவை உருவாக்கப்பட்டு கற்கைச் சபைகள் மறுசீரமைக்கப்பட்டது. மூன்றாவதாக கல்விச்சட்டம் கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களை பணியமர்த்தி நீண்டகால தேவையான மனிதவள தேவையினை பூர்த்தி செய்து இறுதியாக பௌதீக வளங்களை விரிவுப்படுத்துவதற்கும் அதன் பயன்பாட்டினை அதிகரிப்பதற்குமான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டது.

2017 ஆம் ஆண்டில், மனித வள முகாமைத்துவ நிறுவனத்தின் முதன்மை நிகழ்ச்சித் திட்டமான தொழிலாளர் கல்வி இளமாணி நிகழ்ச்சித் திட்டத்தில் அண்ணளவாக 184 புதிய மாணவர்கள் பதிவுசெய்து கொண்டுள்ளதுடன் அந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 537 ஆகும். மேலும், சிரேஷ்ட முகாமைத்துவ தரம் அல்லது தொழில்முறையாளர்களாக இருந்த சுமார் 542 மாணவர்கள் அவர்களின் குறித்த பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களில், அதாவது, வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம், மனித வள முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம், சேவை முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம், புவியியல் தகவல் நுட்பத்தில் விஞ்ஞான முதுமாணி மற்றும் அனர்த்தப் பகுப்பாய்வு மற்றும் தணித்தலில் விஞ்ஞான முதுமாணி போன்ற நிகழ்ச்சிகளில் பயின்று வருகின்றார்கள்.

2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொத்தமாக 295 மாணவர்கள் அவர்களது விடயம் தொடர்பான அறிவைப் பெருக்குவதற்காக டிப்புளோமா கற்கைநெறிகளில் சேர்ந்திருந்ததுடன் இந்த ஆண்டு காலப்பகுதியில் சான்றிதழ் கற்கைநெறிகளிற்குக் கூட மொத்தமாக 2537 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருந்தனர். கூறப்பட்ட ஆண்டு காலப்பகுதியில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் 12 செயலமர்வுகள் நடாத்தியிருந்ததுடன் மொத்தமாக 907 மாணவர்கள் தொழில்சார் துறையொன்றில் தமது அறிவை அதிகரிக்கும் பொருட்டு இந்த செயலமர்வுகளில் பங்கேற்றிருந்தனர்.

நாங்கள், மனித வள மேம்பாட்டு நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம், மக்கள் ஒரு முன்னேற்றகரமான சமூகத்தில் வாழ வேண்டும் என ஏங்குவோர், இரண்டு உன்னத இலக்குகளை மேற்கொண்டிருந்தோம்; தேவையான அளவு மற்றும் தரத்தில் மனித திறமையை வளர்ப்பது மற்றும் கூட்டுத் தெரிவுகள் மற்றும் ஒரு கூட்டு முயற்சியை மேற்கொள்ளுமாறு பணியாளர் மற்றும் மேலாளர் ஆகிய இருதரப்பினருக்கும் கல்வியறிவு அளித்தல். நாம், மனித வள மேம்பாட்டு நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம், ஒரு முற்போக்கான சமுதாயத்தில் வாழ்வது அத்துடன் மற்றவர்களையும் வாழ விட வேண்டும் என்ற கனவை உடைய உங்கள் அனைவரையும் அந்த கனவினை ஒரு யதார்த்தமாக மாற்ற எங்களுடன் இணையுமாறு வரவேற்கின்றோம்.



**பேரா. ஜேஏஎஸ்கே ஜயகொடி**
**பணிப்பாளர் மற்றும் கல்விசார் குழுவின் தலைவர்**

## உள்ளடக்கம்


| இல. | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 01. | **மனித வள மேம்பாட்டு நிறுவனம் பற்றிய அறிமுகம்** | 51 - 55 |
| 01.1 | 2017 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் | |
| 01.2 | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் முகாமைத்துவம் | |
| 01.3 | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகம்சார் நிறுவனக் கட்டமைப்பு (2017 இன் ஆரம்பத்தில்) | |
| 01.4 | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகம்சார் நிறுவனக் கட்டமைப்பு (2017 இன் நடுப்பகுதி முதல்) | |
| 01.5 | மனித வள முகாமைத்துவ நிறுவனத்தின் கல்விசார் குழு | |
| 02. | **2017 இல் நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் அடைவுகள்** | 55 - 59 |
| 02.1 | கல்விசார் அடைவுகள் | |
| 02.2 | நிர்வாக அடைவுகள் | |
| 02.3 | உடல் வசதிகள் உள்ள அடைவுகள் | |
| 02.4 | மாணவர்களின் மென்- திறன்கள் மேம்பாடு | |
| 02.5 | பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் புறப் பாடவிதான செயற்பாடுகள் | |
| 02.6 | மனித வள மேம்பாட்டு நிறுவன கூட்டு சமூக பொறுப்பு | |
| 03. | **2017 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் செயலாற்றல்** | 60 - 66 |
| 03.1 | கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| 03.1.1 | இளமாணி கற்கை நிகழ்ச்சித்திட்டம் | |
| 03.1.2 | பட்டப்பின் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| 03.1.3 | நிறைவேற்று டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டம் | |
| 03.1.4 | டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| 03.1.5 | சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| 03.2 | 2017 ஆம் ஆண்டில் பயிற்சி செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் | 66 - 69 |
| 03.2.1 | மனித வள முகாமைத்துவ அலகினால் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் | |
| 03.2.2 | சேவை முகாமைத்துவ அலகினால் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் | |
| 03.2.3 | விரிவாக்க நிகழ்சித்திட்ட அலகினால் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் | |
| 03.2.4 | மனித வள மேம்பாட்டு நிறுவன பணியாளர்களுக்கான பயிற்சி | |
| 03.3 | ஆராய்ச்சி, புதுமைகள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள் | |
| 04. | **கல்விசார் பணியாளர், நிர்வாக மற்றும் நிர்வாகம் - சாராத பணியாளர்கள் விபரங்கள்** | 69 - 70 |
| 05. | **நூலகம்** | 70 |

06 **நிதி நடவடிக்கைகள்**


2017 திசெம்பர் 31ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி செயலாற்றல் கூற்று

2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான திருத்தப்பட்ட பங்கு மூலதனம் - நிகர சொத்து

2017 திசெம்பர் 31ஆம் திகதி அன்று இருந்தவாறான திருத்தப்பட்ட நிதி நிலைமை கூற்று

2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான திருத்தப்பட்ட காசுப் பாய்வுக் கூற்று

பொதுக் கணக்குப்பரிசோதகர் அறிக்கை

2017ம் ஆண்டுக்கான கணக்காய்வு சம்பந்தமான கருத்ததுக்கள்

**71 - 105**

# 1. மனித வள மேம்பாட்டு நிறுவனம் பற்றிய அறிமுகம்

மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் வரலாறு கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களுக்கு அதன் முன்னோடியான; 1979 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ், அது 2006 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினால் திருத்தப்பட்டது, 1975 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட தொழிலாளர் கல்வி நிறுவனம் வரை பின் செல்கின்றது. 2006 ஆம் ஆண்டில், தொழிலாளர் கல்வி நிறுவனம் மனித வள மேம்பாட்டு நிறுவனம் என பெயரிடப்பட்டது. பட்டம், டிப்ளோமாக்கள், சான்றிதழ், மற்றும் ஏனைய கல்விசார் பட்டங்களை வழங்க மனித வள மேம்பாட்டு நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்க அதன் கட்டளைச் சட்டம் 2017 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. மனித வள மேம்பாட்டு நிறுவனம், நாட்டின் மிகவும் பழைமையான பல்கலைக்கழகமாகவும் உலகில் உச்ச 1000 பல்கலைக்கழகங்களில் ஒன்றான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஒரு நிறுவனமாக உள்ளது.


அதன் சுமார் நான்கு தசாப்த வரலாற்றுக் காலப் பகுதியில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் சுற்றுச்சூழலினுள் பல மாற்றங்களையும் புதிய மேம்பாடுகளையும் கண்டிருக்கின்றது, அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிடுவதாயின் தனியார்த் துறையின் வளர்ச்சி, அறிவுசார் பொருளாதாரத்தின் தோற்றம் மற்றும் தொழிலாளர் படையின் பூகோளமயமாக்கல் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. இந்த அபிவிருத்திகளை தழுவும் அதன் முயற்சியில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் தொடர்ச்சியாக பரிணாம வளர்ச்சியடைந்து இருப்பதுடன் அதன் அசல் நோக்கம் “வேலை-குழுக்களை கற்பித்தல்” ஒரு புதிய கருத்தினைப் பெற்றிருக்கின்றது. தற்பொழுது உள்ளவாறு “வேலை-குழு” எனக் கருதப்படுவது “முகாமைத்துவம்சார்/ தொழில்சார் வேலை-குழுக்கள்”, மற்றும், மனித வள மேம்பாட்டு நிறுவனம் “முகாமைத்துவம்சார்/ தொழில்சார் வேலை-குழுக்களின்” மனித திறனையும் கூட மேம்படுத்துவதற்கு உறுதி பூண்டுள்ளது.


ஒரு நிறுவனமாக, அதன் கல்விசார் செயற்பாடுகள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நெருக்கமான அவதானிப்பிற்கு உட்பட்ட, ஆகையால் மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் அனைத்து கல்விசார் அலுவல்களிலும் அதிக தரங்களைப் பேணுவதற்கு கட்டுப்பட்டிருப்பதுடன் எந்த உயர் கற்றல் நிறுவனமும் பேண வேண்டியுள்ள நல்ல பாரம்பரியங்களைத் தொடர்கின்றது.

தொழிலாளர் கல்வி நிறுவனம் தொடக்கத்தில் அனைத்து வகையான வேலையாட்களுக்கும் ஒரு பணியாளராக அவர்களுடைய வேலைத் தலத்தில் பயனுறுதியான பங்களிப்பினை வழங்குமாறு அவர்களுடைய பொறுப்புக்களை புரிந்துகொள்ளுதல் மற்றும் அவர்களுடைய திறன்கள், தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்துதற் பொருட்டு ஏற்றுக் கொள்ளத்தக்க தரமான விரிவான உயர் தரமான கல்வி வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் முக்கியமாக 1983 ஆம் ஆண்டு வரை கலை இளமாணி பட்டத்தினை வழங்கியது. எவ்வாறாயினும், 1986 ஆம் ஆண்டில் தொழிலாளர் கல்வி நிறுவனம் தொழிலாளர் கல்வியில் இளமாணிப் (BLE) பட்டத்தை வழங்கத் தொடங்கியது. 2007 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் கல்விசார் நடவடிக்கைகளை விரிவாக்கியதுடன் முதுமாணிப் பட்டங்களையும் கூட வழங்க ஆரம்பித்தது. 2015-2016 ஆம் ஆண்டுகளில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை மீள-ஆராய்ந்ததுடன் கற்கைநெறிகளை இளமாணி நிகழ்ச்சித் திட்டம், பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்கள், நிறைவேற்று டிப்புளோமாக்கள், டிப்புளோமாக்கள் மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகள் என ஐந்து நிகழ்ச்சித்திட்ட வகைகளின் கீழ் வழங்கத் தீர்மானித்தது. இருப்பினும் சில நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய அனுமதியைப் பெறும்வரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் 01 இளமாணிப்பட்ட நிகழ்ச்சித்திட்டம், 04 முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், 15 டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் 08 சான்றிதழ் கற்கைநெறிகளை தொழிலாளர் சமூகத்திற்கும் பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கும் வழங்கியது. (அட்டவணை 1.1: 2017 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள்).

2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில், மொத்த மாணவர் உள்ளெடுப்பு 3,014 ஆகவிருந்தது. பால் பரம்பல் மற்றும் கற்கைநெறிகளுக் இடையே மாணவர் உள்ளெடுப்பு தொடர்பான பங்கு விபரங்கள் பின்வரும் உருவில் சமர்பிக்கப்பட்டிருக்கின்றன.

**மாணவர் பதிவு - 2017**




*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு. 2017, IHRA*

## 1.1 2017 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள்

| இல. | கற்கைநெறியின் பெயர் |
|---|---|
| | **இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டம்** |
| 01 | தொழிலாளர் கல்வி இளமாணி மற்றும் தொழிலாளர் கல்வியில் டிப்புளோமா |
| | **பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்கள்** |
| 02 | வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் |
| 03 | மனித வள முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் |
| 04 | சேவை முகாமைத்துவத்தில் முதுமாணி |
| 05 | புவியியல் தகவல் நுட்பத்தில் விஞ்ஞான முதுமாணி |
| | **நிறைவேற்று டிப்புளோமா / டிப்புளோமா நிகழ்ச்சித் திட்டங்கள்** |
| 06 | மனித வள முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா |
| 07 | சேவை முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா |
| 08 | சேவை முகாமைத்துவத்தில் டிப்புளோமா |
| 09 | மேலதிக மொழியாக தமிழில் டிப்புளோமா |
| 10 | முகாமைத்துவத்தில் டிப்புளோமா |
| | **சான்றிதழ் கற்கைநெறிகள்** |
| 11 | ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கைநெறி |
| 12 | ஆங்கிலத்தில் அடிப்படைக் கற்கைநெறி |
| 13 | ஆசிரியர்களுக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கைநெறி |
| 14 | பேச்சு ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கைநெறி |
| 15 | பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கான ஆங்கிலம் குறுகிய கற்கைநெறி |
| 16 | கணினி பிரயோகங்களில் சான்றிதழ் கற்கைநெறி |
| 17 | தமிழ் மொழியில் சான்றிதழ் கற்கைநெறி - அடிப்படை |
| 18 | தமிழ் மொழியில் சான்றிதழ் கற்கைநெறி - இடைநிலை |

மனித வள மேம்பாட்டு நிறுவனம் தேசிய அபிவிருத்தியின் மனித அத்திவாரத்தை வலுவூட்டும் முதிர்ந்த, விவேகமுள்ள "அறிவுசார் பயனர்களாக" பூகோள நிலைமைகளின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றல் படைத்த மனித வளத்தினை மேம்படுத்துவதற்கு முழுவதுமாக அர்பணிக்கப்பட்ட சால்புமிகு நிறுவனமாகத் திகழ்வதற்கு எதிர்பார்த்து இருக்கின்றது. இந்த முடிவினை நோக்கி, மனித வள மேம்பாட்டு நிறுவனம் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இருந்து மரபுரிமையாகப் பெறப்பட்ட வளமான கல்விசார் பாரம்பரியம் மற்றும் உயர் கல்விசார் செந்தரங்களை. பலப்படுத்துகின்ற அதேவேளை ஒரு பாரிய மாற்றத்திற்கு உட்படுகின்றது. இந்த மாற்றம், நல்லாட்சி நிர்வாகத்திற்கான தரங்களை அடைந்து, அதிகம் தேடப்படுகின்ற ஊழியர் தர அடையாளம் மற்றும் ஒரு சமூகப் பொறுப்புள்ள பொது நிறுவனமாக வருவதற்கு உள்ளூர் மற்றும் உலகளாவிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 1.2 மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் முகாமைத்துவம்


நிறுவனத்தின் பணிப்பாளர், அதன் நிர்வாக மற்றும் கல்விசார் தலைவராவர், அவர் ஒரு முழுநேர உத்தியோகஸ்த்தர், மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கல்விசார் குழுவின் பரிந்துரையின் பேரில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேரவையின் அனுமதியுடன் துணைவேந்தரினால் நியமிக்கப்படுபவர். லுவலராகவும்

பணிப்பாளர் கல்விசார் குழுவின் தலைவராக, கற்கைகள் சபைகளின் ஒரு பதவி வழி உறுப்பினராக இருக்கின்றார். அவர் நிறுவனத்தின் பிரதான பொறுப்புக் கூறும் அலுவலர் ஆகவும் நிறுவனத்தினுள் ஒழுக்காற்றிற்குப் பொறுப்பான அலுவலராகவும் உள்ளார்.

பேரா. ஜேஏஎஸ்கே ஜயகொடி, கொழும்புப் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடத்தில் முகாமைத்துவம் மற்றும் நிறுவன கற்கைகள் துறையில் இணைப் பேராசிரியராக இருப்பவர், 2015 ஆகஸ்ட், 25ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மூன்று வருடங்களுக்கு நிரந்த பணிப்பாளராக நியமிக்கப்பட்டு இருக்கின்றார்.


நிறுவனத்தின் நிறுவனக் கட்டமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

## 1.3 மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகம்சார் நிறுவனக் கட்டமைப்பு (2017 இன் ஆரம்பத்தில்)



2017 ஆம் ஆண்டில் கல்விசார் குழுவின் வழிகாட்டலுடன் நிறுவகக் கட்டமைப்பினை மனிதவள மேம்பாட்டு நிறுவனம் மறுசீரமைத்தது. அது நிறுவனத்தின் நீண்டகால திட்டத்திற்கு இணங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 1.4 மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகம்சார் நிறுவனக் கட்டமைப்பு (2017 இன் நடுப்பகுதி முதல்)




## 1.5 மனித வள முகாமைத்துவ நிறுவனத்தின் கல்விசார் குழு

மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்காக சகல கற்கைச்சபைகளும் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. அதன்படி கல்விசார் குழுவின் அனுமதியுடன் நான்கு கற்கைச்சபைகள் உருவாக்கப்பட்டுள்ளது. மனிதவள கற்கை தொடர்பான கற்கைச்சபை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் பட்டப்பின் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான கற்கைச்சபை, இளமாணிப்பட்ட கற்கைகள் தொடர்பான கற்கைச்சபை, விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கற்கைச்சபை மற்றும் மொழிகள் கற்பித்தல் தொடர்பான கற்கைச்சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**கல்விசார் குழு (11 கூட்டங்கள்)**

| 01 | பேரா. ஜேஏஎஸ்கே ஜயக்கொடி | தலைவர் |
|---|---|---|
| 02 | பேரா. கேஆர்ஆர் மஹாநாம | பதவிவழி உறுப்பினர் |
| 03 | பேரா. அத்துல ரணசிங்க | பதவிவழி உறுப்பினர் |
| 04 | பேரா. (திருமதி) எம்.வி. விடானபத்திரனய | பதவிவழி உறுப்பினர் |
| 05 | பேரா. கே குணவர்த்தன | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 06 | பேரா. (திருமதி) நயனி மெலகொட | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 07 | பேரா. (திருமதி) டிநுகா விஜேதுங்க | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 08 | திரு. ஏச்எம்என் வரக்காஉல்ல | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 09 | திரு. என் செல்வக்குமரன் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 10 | திரு. டிஎம்எஸ் தசநாயக்க | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 11 | திரு. கேஏ விமலேந்திரராஜா | திறைசேரி பிரதிநிதி |
| 12 | திரு. எம்ஜிஜி ஹெமகுமார | கற்கைச் சபை பிரதிநிதி |
| 13 | திருமதி கேபி மாதொட்டாராச்சி | கற்கைச் சபை பிரதிநிதி |
| 14 | திருமதி பீகேபி அபேசூரிய | கற்கைச் சபை பிரதிநிதி |

### மனித வள முகாமைத்துவ நிறுவனத்தின் கற்கைச் சபைகளினால் நடாத்தப்பட்ட கூட்டங்கள்


| கற்கைச் சபைகளின் பெயர் | நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பட்டப்பின் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான கற்கைச்சபை (2017 நவம்பரில் நிறுவப்பட்டது) | 02 |
| இளமாணிப்பட்ட கற்கைகள் தொடர்பான கற்கைச்சபை (2017 டிசம்பரில் நிறுவப்பட்டது) | 01 |
| மொழிகள் கற்பித்தல் தொடர்பான கற்கைச்சபை | 09 |
| விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கற்கைச்சபை | 10 |

புதிய நிறுவனக் கட்டமைப்பு ஆறு (06) கல்விசார் குழுக்களைக் கொண்டிருக்கின்றது. அந்தக் குழுக்களில் நான்கு (04) குழுக்கள் மாத்திரமே தற்பொழுது செயற்படுகின்றது. அக் குழுக்களினால் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

| குழுக்களின் பெயர் | நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கணக்காய்வு குழு (ஒரு சுயாதீனமான அமைப்பு) | 04 |
| நிதி குழு | 09 |
| நூலக குழு | 04 |
| தர உறுதிப்படுத்தல் குழு | 01 |

## 2. 2017 இல் நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் அடைவுகள்

### 2.1 கல்விசார் அடைவுகள்




- 2017 ஆம் ஆண்டளவில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் 04 பிரிவுகளில் சுமார் நான்காயிரத்து நூற்று பதின்மூன்று (4,113) தகுதிபெற்றவர்களை அல்லது பட்டதாரிகளை உருவாக்கியது. அது நானூற்று எட்டு (408) பட்டப்பின் பட்டதாரிகளை / பட்டப்பின் டிப்ளோமாதாரிகளையும் நூற்று முப்பத்தேழு (137) பட்டதாரிகளையும் இருநூற்று இருபது (220) நிறைவேற்று டிப்ளோமதாரிகள் / டிப்ளோமாதாரிகளையும் மூவாயிரத்து முன்னூற்று நாற்பத்தெட்டு (3348) சான்றிதழ்தாரிகளையும் கொண்டிருக்கின்றது. பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டப்பிரிவு மிக உயர்ந்த விளைவு விகிதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அது மொத்த நிகழ்ச்சித்திட்ட விளைவின் 41% ஆக இருப்பதனைக் காட்டுகின்றது. மிகவும் குறைந்த விளைவு விகிதத்தினை சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் பதிவுசெய்தது. அது மொத்த நிகழ்ச்சித்திட்ட விளைவின் 15% னை பதிவு செய்தது.



- மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் ஆண்டுக்கான டிப்ளோமா விருது வழங்கும் வைபவம் பேராசிரியர் லக்ஸ்மன் திசாநாயக்கா அவர்களின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பிரதான மாநாட்டு மண்டபத்தில் 2017 ஏப்ரல் 25 ஆந் திகதி நடைபெற்றது. இப்பட்டமளிப்பு நிகழ்வில் நானூற்று ஐம்பத்திரண்டு (452) டிப்ளோமாதாரிகளுக்கு டிப்ளோமா பட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

- சந்தைத் தேவைப்பாட்டுக்கு இணங்க ஒவ்வொரு முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் பாடத்திட்டங்களும் மீளாய்வு செய்யப்பட்டன. 2017 ஏப்ரல் 26 ஆந் திகதி, ஒவ்வொரு முதுமானிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்குமான புதிய பாடத்திட்டம் பேரவையின் அங்கீகாரத்திற்காக மூதவையினால் விதப்புரை செய்யப்பட்டது. பேரவையானது 2017 ஆகஸ்ட் மாதம் 16 ஆந் திகதி புதிய முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அதனது அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. புதிய பாடத்திட்ட மீளாய்வுடன், மனித வள முன்னேற்ற நிறுவகம் 2017 ஆம் ஆண்டில் பட்டப் பின்படிப்பு பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக ஆரம்பித்தது.

- இளமாணிப்பட்ட மற்றும் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் கல்வி சார் மற்றும் நிருவாகப் பணிகளுக்கான கற்றல் முகாமைத்துவ முறைமையினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற காகிதங்களின் அளவினை குறைப்பதற்கு இவ்வசதி உதவுகிறது.

- கல்வித்தரத்தினை மேமபடுத்தும் நோக்கோடு மாணவர்களின் வரவு தொடர்பான கொள்கை ஒன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதுன் தொழிலாளர் கல்வியில் இளமாணிக் கற்கைநெறியின் பாட அலகுகளின் தரத்தினை அதிகரிப்பதற்காக விரிவுரை மதிப்பீட்டு முறையும் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

- 2017 ஆம் ஆண்டில், கலாநதி டபிள்யு.எஸ். சந்திரசேகர அவர்கள் சீனாவில் உள்ள வொஹன் பல்கலைக்கழகத்தில் கலாநிதி படிப்பினைப் பூர்த்திசெய்ததுடன் திரு. கே.டி.என். ஹேவகே அவர்கள் அவரது எம்பில் பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழத்தில் பெற்றுள்ளார்கள்.

- கல்வி சார், நிருவாக, கல்விசார் - துணை மற்றும் கல்வி சாரா பதவியினரைக் கொண்ட ஒரு குழுவினர் நவம்பர் 10 மற்றும் 11 திகதிகளில் மலாயாப் பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தினால் ஒழுங்கு செய்து நடத்தப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்தில் அதாவது உயர் கல்வியில் 21 ஆம் நூற்றாண்டுக்கான கற்றல் மற்றும் முகாமைத்துவக் கல்வி எனும் கல்வி சார் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினர்.

## 2.2 நிர்வாக அடைவுகள்

- கொழும்புப் பல்கலைக் கழகத்தின் சபை மனித வள முன்னேற்ற நிறுவகத்தின் திருத்தப்பட்ட கட்டளைச் சட்டத்தினை அங்கீகரித்துடன் அங்கீகரிக்கப்பட்ட கட்டளைச்சட்டம் 2017 ஆகஸ்ட் 22 ஆந் திகதி செவ்வாய்கிழமை 2033/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

- சகல பிரிவுகளுக்குமான உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பும் ஆரம்பிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் பிரிவுகளுக்கான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படடனர். விரிவுரையாளர் (தகுதிகான்நிலை) ஒருவர் (01), முகாமைத்துவ உதவியாளர்கள் பதினொருவர் (11), வேலை உதவியளார் ஒருவர் (01), வாசிகசாலை தகவல் உதவியாளர்கள் இருவர் (02) தொழிலாளர்கள் இருவர் (02) ஆகியோர் அவர்களாவர்.

- கல்விசார் குழு மற்றும் பல்கலைக்கழகத்தின் வழிகாட்டுதலுடன் சகல கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒழுங்கமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எவ்வாறாயினும், மேம்பாட்டு நிறுவனம் குறிப்பிட்ட ஆண்டில் அதிகாரிகளிடமிருந்து முறையான அங்கீகாரத்தினைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக குறித்த சில கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களைக் கைவிட வேண்டியேற்பட்டது.

- சேவையின் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் 2017 ஆம் ஆண்டில் ஐந்து (05) பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவுறுத்தப்பட்டன.

- 2017 ஆம் ஆண்டில் இரண்டு புதிய சபைகள் அதாவது பட்டப்பின் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான கற்கைச்சபை, மற்றும் இளமாணிப்பட்ட கற்கைகள் தொடர்பான கற்கைச்சபை போன்றவை கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்டது.

## 2.3 பௌதிக வளங்களின் அடைவுகள்

- 2017 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் பௌதிக உட்கட்டமைப்பில் அதிக எண்ணிக்கையான மேம்படுத்தல்களை அடையக்கூடிய நிலையில் இருந்தது. புதிய மலசலத் தொகுதியுடன் கூடிய முன்மொழியப்பட்ட விரிவாக்கப்பட்ட கட்டடப் பகுதியின் நிருமாணங்கள் 2017 ஆம் ஆண்டின் மத்தியில் மேற்கொள்ளப்பட்டன.

- மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கணணி ஆய்வுகூடத்தினைப் புதுப்பித்து நவீனமயப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆய்வுகூடத்தின் பௌதிகக் கட்டமைப்பு மாத்திரமன்றி நவீன கணணி துணைக்கருவிகளுடன் கூடிய வசதியளிப்பதற்கான முன்முயற்சிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

- மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தைப் புதுப்பித்து நவீனப்படுத்துதலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நவீன செவிப்புல மற்றும் கட்புல வசதிகள் மற்றும் தளபாட உபகரணங்களுடன் கேட்போர் கூடத்தை தரமுயர்த்துவதற்கான கேட்போர் கூடத்தின் பௌதீக இடைவெளியை மேம்படுத்துவதையும் இந்நவீனமயமாக்கல் கொண்டிருந்தது.

- நிறுவகத்துக்கான முறையான கழிவுநீர் முறைமையின் நிருமானத்தைப் பூரணப்படுத்தியது.

- நல்லாட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்கின்ற நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான அரசாங்கத்தின் தொலைநோக்கினை பகுதியளவில் அடையும் வகையில், 2018 – 2022 ஆண்டுக் காலப்பகுதிக்கான பரந்த திட்டத்தைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 2.4 மாணவர்களின் மென் திறன்களின் விருத்தி



- 2017 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவகத்தினால் நடத்தப்படும் முகாமைத்துவ மற்றும் மத்தியதர முகாமைத்துவக் கற்கைநெறிகளைக் கற்கின்ற மாணவர்களுக்காக ஏறக்குறைய 10 பயிற்சிப் பட்டறைகள் வெற்றிகரமாக நடத்திமுடிக்கப்பட்டன. இப்பயிற்சிப் பட்டறைகள் இலங்கைத் தரக் கட்டமைப்பில் எதிர்பார்க்கப்படுகின்ற மாணவர்களின் மென்திறனை மேம்படுத்தும் நோக்கினைக் கொண்டுள்ளன. இப்பயிற்சிப் பட்டறைகளில் எழு நூற்றுப் பதினாறு (716) மாணவர்கள் பங்குபற்றினர்.

- 2017 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் சேவை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தில் கற்கின்ற மாணவர்களுக்கான இரண்டு வெளியகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவுசெய்தது. இந்நிகழ்ச்சித்திட்டங்களில் ஐம்பத்து எட்டு (58) பட்ட மேற்படிப்பு மற்றும் டிப்ளோமா மாணவர்கள் முனைப்புடன் பங்குபற்றினர்.

- மனித வள மேம்பாட்டு நிறுவனம் புவியியல் தகவல் தொழிநுட்பத்தில் விஞ்ஞான முதுமானி நிகழ்ச்சித்திட்டத்தில் கற்கின்ற மாணவர்களுக்கான களக் கற்கை சுற்றுலாவை வெற்றிகரமாக நிறைவு செய்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் அறுபத்தேழு (67) மாணவர்கள் முனைப்புடன் பங்குபற்றினர். களக் கற்கை சுற்றுலா 2017 ஜுன் 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டன. இக்களக் கற்கை வான்வழிப் புகைப்படம், ட்றோன் படமிடல், பூகோள நிலைப்படுத்தல் முறைமை என்பன தொடர்பான அறிவு மற்றும் செய்முறைப் பயிற்சியை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது.

## 2.5 பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் புறப் பாடவிதான செயற்பாடுகள்




- 2017 ஆம் ஆண்டில், திரு. எம்எஸ்சி. பெரேரா மற்றும் திரு. கேடிபி. குருகம ஆகிய இரண்டு மனித வள முன்னேற்ற நிறுவக 2.5 பணியாளர்கள் இந்தியாவின் பங்களுர் பெஸ் பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கிறிக்கெட் போட்டியில் பங்குபற்றிய கொழும்புப் பல்கலைக்கழக கிரிக்கெட் அணியில் பிரதிநிதித்துவம் செய்ததுடன் அவ்வணி குறிப்பிட்ட போட்டியில் இரண்டாம் நிலைக்கான கிண்ணத்தை வெற்றிகொண்டது.

- 2017 ஆம் ஆண்டில் தொழிலாளர் கல்வி இளமாணிப்பட்ட மாணவர்களால் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. அது வீஎல்ஈ கிரிக்கெட் பியஸ்ற்றா – 2017 எனப் பெயரிடப்பட்டது. இக்கிரிக்கெட் போட்டி தொழிலாளர் கல்வி இளமாணி நிகழ்ச்சித்திட்ட மாணவர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. சுமார் 24 அணிகள் இப்போட்டியில் பங்குபற்றியதுடன் சம்பியன் கிண்ணம் 3 ஆம் ஆண்டு தொழிலாளர் கல்வி இளமாணிப்பட்ட மாணவர்களால் வெற்றிகொள்ளப்பட்டது.

## 2.6 மனித வள மேம்பாட்டு நிறுவன கூட்டு சமூக பொறுப்பு

- தொழிலாளர் கல்வி இளமாணிப்பட்ட மாணவர்கள் 2017 செப்டம்பர் 17 ஆந் திகதி பலாங்கொடையிலுள்ள வெலிபதயயா ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்காக புத்தக அன்பளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக ஒழுங்கு செய்தனர். இப்பாடசாலை ஒரு வசதி குறைந்த பாடசாலை எனக் கருதப்படுகின்றது. மனித வள மேம்பாட்டு நிறுவக தொழிலாளர் கல்வி இளமாணிப்பட்ட நிகழ்ச்சித்திட்ட மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினர்.

- நவீன வசதிகளுடன் நிறுவகத்தின் கட்டமைப்பினை நவீனமயப்படுத்தும் நோக்குடன் புனருத்தான செயன்முறையை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது அலுவலகத்திலுள்ள சில தளபாடங்கள், கணிணி மற்றும் கணிணி உதிரிப்பாகங்களை கட்டிடத்திலிருந்து அகற்றுவதை உறுதி செய்தது. எவ்வாறாயினும், கல்விசார் குழுவின் அங்கீகராத்துடன் பல்கலைக்கழக தாபன விதிக்கோவையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கினங்க, நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள பல்வேறு நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட ஆண்டின் போது பொருட்களை அன்பளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- இறுதியாக, 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் முன்னூற்று எட்டு (308) அலுவலகத் தளபாடப் பொருட்கள், முப்பத்தொரு (31) செவிப்புல கட்புல உபகரணங்கள், பதினான்கு (14) வலையமைப்பு உபகரணங்கள் என்பன உள்ளடங்கலாக அறுநூற்று எழுபத்தைந்து (675) பொருட்களை அன்பளிப்புச் செய்தது. அன்பளிப்புகள் கொழும்புப் பல்கலைக்கழக கணிணிப் கல்லூரி, விஞ்ஞானப் பீட ஊடகப் பிரிவு, சிரிப்பாலி கெம்பஸ், பத்து அரசாங்கப் பாடசாலைகளில் இடம்பெற்றன.

| | நிறுவனம் | கணிணித் துணைக் கருவிகள் | அலுவலகத் தளபாடம் | கட்புல செவிப்புல உபகரணம் | வலையமைப்பு உபகரணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கந்தகெப்பு உல்பத்த ஆரம்பப் பாடசாலை – பதுளை | 24 | 10 | - | - | 34 |
| 2 | உடவெல இரண்டாம்நிலை பாடசாலை – பதுளை | 25 | 11 | - | - | 36 |
| 3 | கலிக்காவெல கனிஸ்ட பாடசாலை – மகியங்கனை | 25 | 10 | - | - | 35 |
| 4 | சிறி தம்மானன்த மகா வித்தியாலயம் - பதுளை | 18 | 8 | - | - | 26 |
| 5 | வெலிக்கமுல்ல மகா வித்தியாலயம் - பதுளை | 38 | 18 | - | - | 56 |
| 6 | சிறி சுதர்மவாச பிரிவேனா - ஹாலிஎல, பதுளை | 35 | 18 | - | - | 53 |
| 7 | கந்தான சிறி சீவலி மகா வித்தியாலயம் - நீர்வீழ்ச்சிப் பள்ளதாக்கு | 39 | 18 | - | - | 57 |
| 8 | பத்தேகம மகா வித்தியாலயம் - நீர்வீழ்ச்சிப் பள்ளத்தாக்கு | 69 | 35 | - | - | 104 |
| 9 | சிறி ராகுல மகா வித்தியாலயம் - பதுளை | 22 | 10 | - | - | 32 |
| 10 | மில்லத்தவ மகா வித்தியாலயம் - கிராந்துருக்கோட்டை | 27 | 11 | - | - | 38 |
| 11 | சிறி பாலி கெம்பஸ் - கொழும்புப் பல்கலைக்கழகம் | - | 159 | - | - | 159 |
| 12 | விஞ்ஞான பீடம் - கொழும்புப் பல்கலைக்கழகம் | - | - | 31 | - | 31 |
| 13 | கொழும்புப் பல்கலைக்கழக கணிணிப் கல்லூரி - கொழும்புப் பல்கலைக்கழகம் | - | - | - | 14 | 14 |
| | | **322** | **308** | **31** | **14** | **675** |

## 3. 2017 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் செயலாற்றல்

### 3.1 கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

2017 இல், மனித வள மேம்பாட்டு நிறுவனம் பிரிவு 3.1. இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு 18 கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.


1. இளமாணிப் பட்ட கற்கை நிகழ்ச்சித்திட்டம்
2. முதுமாணிப் பட்ட கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள்
3. நிறைவேற்று டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்
4. டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்
5. சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள்

#### 3.1.1 இளமாணி கற்கை நிகழ்ச்சித்திட்டம்

தொழிலாளர் கல்வியில் இளமாணி (BLE) பட்ட நிகழ்ச்சித்திட்டம் மாத்திரமே அரச நிதிகளினால் ஆதரவளிக்கப்பட்டு மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் 38 வருடங்களுக்கு மேலாக நடாத்தப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் இரண்டு கூறுகளைக் கொண்டிருக்கின்றது தொழிலாளர் கல்வியில் இளமாணி(BLE) மற்றும் தொழிலாளர் கல்வியில் டிப்புளோமா. தொழிலாளர் கல்வியில் இளமாணி(BLE) நிகழ்ச்சித்திட்டத்தின் கற்கைக் காலம் ஆறு (06) அரையாண்டுகளை உள்ளடக்கிய 3 வருடங்களாக இருக்கின்றது. பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு நேரடியாகப் பதிவு செய்து கொள்வதற்கு தகுதி இல்லாத விண்ணப்பதாரிகள் ஒரு வருட டிப்புளேமா நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்ட முடியும். இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் வாய்ப்புச் சோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை இரண்டும் நுழைவு அளவுகோலாக பிரயோகமாகும்.

2017 ஆம் ஆண்டில், 369 விண்ணப்பதாரிகள் தெரிவுப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தார்கள் அனைத்து விண்ணப்பதாரிகளிலும் 45% ஆன பரீட்சார்த்திகள் மாத்திரமே நிகழ்ச்சித் திட்டத்தினைத் தொடரத் தகுதி பெற்றிருந்தனர். நூற்றி தொன்னூற்று நான்கு (184) இளமாணிப் பட்ட விண்ணப்பதாரிகள் பதிவுசெய்தனர்

2017 இல் இளமாணிப் பட்தாரிகளின் பால் விபரம்




ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு 2017, IHRA


உரு வில் காட்டப்பட்ட வாறு, இளமாணிக் கற்கை நிகழ்ச்சித்திட்டத்தில் ஆண்களின் விகிதாசாரம் 52% ஆக இருந்தது. விகிதாசார அடிப்படையில் பெண்கனின் பதிவினை விட ஆண்களின் பதிவு அதிகமாக இருந்தது. இருப்பினும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்களின் பதிவு 4% ல் குறைவடைந்துள்ளது.

தொடக்க விழா 2017 மே, 28 ஆம் திகதியன்று கொழும்புப் பல்கலைக்கழக புதிய கலைகள் அரங்கத்தில் நடைபெற்றது. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த கல்விசார் நிகழ்ச்சித் திட்டத்தின் பல்வேறு மட்டங்களில் மொத்த எண்ணிக்கையாக 537 இளமாணிப் கற்கை மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டு இருந்தார்கள். 2013 ஆம் ஆண்டில் இருந்து தொடங்கும் கடந்த 5 வருட காலப் பகுதி பற்றிய பகுப்பாய்விற்கு இணங்க, பட்டமளிக்கப்பட்ட வெளியீடுகளின் ஒட்டுமொத்த சராசரி 57.6% ஆக 2017 ஆம் ஆண்டில் காட்டப்பட்டது.

**தொழிலாளர் கல்வி இளமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல்: 2013 – 2017**


| நிகழ்ச்சித்திட்டம் | மாணவர் உள்ளெடுப்பு எண்ணிக்கை | | | | | பட்டமளிக்கப்பட்ட/ தகுதிவாய்ந்த மாணவர்களின் எண்ணிக்கை[1] | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| தொழிலாளர் கல்வி இளமாணி | 189 | 206 | 157 | 194 | 184 | 153 | 153 | 119 | 124 | 137 |
| தொழிலாளர் கல்வியில் டிப்புளோமா | 55 | 59 | 51 | 54 | 48 | 49 | 37 | 42 | 32 | 30 |

**தொழிலாளர் கல்வி இளமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல்: 2013 – 2017**




*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு 2017, IHRA*

**தொழிலாளர் கல்வி டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல்: 2013 – 2017**




*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு 2017, IHRA*


### 3.1.2 பட்டப்பின் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள்

மனித வள மேம்பாட்டு நிறுவனம் 2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வித்தியாசமான விடயப் பரப்புக்களில் நான்கு பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கியது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் குறிக்கோள் அவர்களுக்கு பொருத்தமான துறைகளில் தொழில் வாண்மையாளர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மைகளை மேம்படுத்துவதாக இருக்கின்றது. மனித வள மேம்பாட்டு நிறுவனம் முகாமைத்துவ கற்கைகளுடன் தொடர்புபட்ட மூன்று பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்திக் கொண்டிருக்கின்றது. முகாமைத்துவ தொழில்களில் சம்பந்தப்பட்டுள்ள மாணவர்கள் அனைத்து முக்கிய முகாமைத்துவ பிரிவுகளிலும் அறிவு மற்றும் விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் அதிக நம்பிக்கையுடன் வியாபார பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை சமாளிப்பதற்கு தேவையான கருத்தியல் மற்றும் பகுப்பாய்வு கருவிகளையும் கூட வழங்குகின்றது.

*1 அட்டவணை/ விளக்கப்படத்தில் காட்டப்படட இந்த தரவு வருட காலப் பகுதியில் பட்டமளிக்கப்பட்ட அல்லது பொருத்தமான தகமைகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் குறித்துக் காட்டுகின்றது. இரு குறித்த வருட உள்ளெடுப்பிற்கு மேற்கோளைக் காட்டவில்லை.*

நிறுவனம் இரண்டு விஞ்ஞான மாணி நிகழ்ச்சித் திட்டங்களை புவித்தகவலியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பகுப்பாய்வு விடயப் பரப்புக்களில் நடாத்தியது. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் புவித்தகவலியலில் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பரப்புக்களில் மதிப்பிடல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் துறை பூராகவும் வளங்களை முகாமை செய்தல் ஆகியனவற்றினுள் சிறப்படைய விரும்பும் மாகணவர்களுக்காக வடிவமைக்கப் பட்டிருக்கின்றன. எனினும், 2017 ஆம் ஆண்டில் புவித்தகவலியல் நிகழ்ச்சித் திட்டத்தினை மாத்திரமே நடாத்தியது. அனர்த்தப் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் தணித்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான மாணவர் பதிவு உரிய அனுமதியினை பெறும்வரை தற்காலிகமாக 2017 ஆம் ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டது.

வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் மற்றும் மனித வள முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மொத்தமாக 149 தொழில்வல்லுனர்கள் அனுமதிக்கப் பட்டதுடன் ஆண்டு காலப் பகுதியில் வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் அதிகமான உள்ளெடுப்பினைக் காட்டியது. பட்டமளிக்கப்பட்ட வெளியீடு 2013 - 2017 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஒரு படிப்படியான அதிகரிப்பினைக் காட்டியது. 2016 ஆம் ஆண்டில் 269 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றதுடன் 2017 ஆம் ஆண்டில் 408 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனா. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 21% அதிகரிப்பைக் காட்டுகின்றது.




*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு 2017, IHRA*


பதிவுசெய்யப்பட்ட ஆண்களின் விகிதாசாரம் பெண்களினதை விட மிகவும் பெரிதானதாக இருந்தது. ஆண்களின் பதிவு செய்த விகிதம் 56% உம் பெண்களின் பதிவு விகிதம் 44% ஆகவும் காணப்பட்டது.


**மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் செயலாற்றல்: 2013 - 2017**

| | நிகழ்ச்சித் திட்டம் | வருடாந்த உள்ளெடுப்பு | | | | | பட்டமளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை[2] | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| 1 | வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் | 162 | 160 | 172 | 61 | 95 | - | 77 | 87 | - | 127 |
| 2 | மனித வள முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் | 173 | 146 | 135 | 67 | 54 | 64 | 113 | 85 | 93 | 135 |
| 3 | சேவை முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் | - | 112 | 116 | 66 | - | - | - | 43 | 88 | 54 |
| 4 | புவியில் தகவல் நுட்பத்துவத்தில் விஞ்ஞான முதுமாணிப் பட்டம் | 50 | 51 | - | 83 | - | 11 | 7 | 7 | 62 | 54 |
| 5 | அனர்த்தப் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் தணித்தலில் விஞ்ஞான முதுமாணிப் பட்டம் | 65 | 50 | - | - | - | - | - | 25 | 26 | 38 |
| | மொத்தம் | **450** | **519** | **428** | **277** | **149** | **75** | **197** | **247** | **269** | **408** |

*[2] அட்டவணை/ விளக்கப்படத்தில் காட்டப்படட இந்த தரவு வருட காலப் பகுதியில் பட்டமளிக்கப்பட்ட அல்லது பொருத்தமான தகமைகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் குறித்துக் காட்டுகின்றது. இரு குறித்த வருட உள்ளெடுப்பிற்கு மேற்கோளைக் காட்டவில்லை.*

**மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர் செயலாற்றல்: 2013 – 2017**




*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு, 2013 - 2017, IHRA*

### 3.1.3 நிறைவேற்று டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டம்

ஒரு நிறைவேற்று டிப்புளோமா பொருத்தமான துறைப் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு தொழில் வாண்மையாளருக்கு ஒரு தனிப்பட்ட தகமையாக உள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் முகாமையாளர்களுக்கு அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட துறைகளில் அவர்களின் அறிவனை நாளதுவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்குமான சந்தர்ப்பங்களை வழங்குவதாக இருக்கும். இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் அவர்களின் அறிவினை மேம்படுத்த நாடும் நடுத்தர நிறைவேற்றுனர்களுக்குகாக வடிவமைக்கப் பட்டிருக்கின்றது.

அத்துடன், நிறைவேற்று டிப்புளோமா நிகழ்ச்சித் திட்டங்கள், பங்குபற்றுனர்களுக்கு அவர்களுடைய வாடிக்கையாளர்களுடன் வினைத்திறனாகப் பணியாற்றுவதற்கு அவர்களுடைய சொந்த வேரூன்றியுள்ள நடத்தை முறைகளுக்கு சவால்விடும் சொந்த அனுபவங்களை கொண்டிருப்பது அத்தியாவசியமாக இருக்கின்றது என்ற உறுதியான நம்பிக்கையில் வேரூன்றியுள்ளதன் அடிப்படையில் தனிப்பட்ட மேம்பாட்டின் மீது கவனம் செலுத்துகின்றன.


மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தில் சகல நிறைவேற்று டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களும் சீரமைக்கப்படுவதற்காக தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே 2017 ஆம் ஆண்டில் கொண்டு நடாத்தப்பட்டது. மொத்தமாக 142 மாணவர்கள் நிறைவேற்று டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தில் கல்வி கற்றனர்.


**மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட நிறைவேற்று டிப்புளோமா பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர் செயலாற்றல்: 2013 – 2017**

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | வருடாந்த உள்ளெடுப்பு | | | | | தகுதிவாய்த மாணவர்களின் எண்ணிக்கை[3] | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| 1 | மனித வள முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா | 68 | 97 | 113 | 35 | - | 38 | 34 | 61 | 81 | - |
| 2 | திட்ட முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா | 29 | - | 31 | - | - | - | - | 13 | - | 17 |
| 3 | அனர்த்த பகுப்பாய்வு முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா | 45 | 43 | - | - | - | - | 25 | - | 23 | - |
| 4 | சேவை முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா | 81 | 83 | 94 | 107 | - | 62 | 50 | 59 | 51 | - |
| 5 | ஒலி, காணொளி தயாரிப்பு மற்றும் ஊடக தொழில்நுட்பத்தில் உயர் டிப்புளோமா | - | 38 | - | - | - | - | - | - | 12 | - |
| 6 | சுற்றுலா நிகழ்வுகள் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா | - | - | 35 | - | - | - | - | - | 34 | - |
| | **மொத்தம்** | **223** | **261** | **273** | **142** | - | **100** | **109** | **133** | **201** | **17** |

*[3] அட்டவணை/ விளக்கப்படத்தில் காட்டப்படட இந்த தரவு வருட காலப் பகுதியில் பட்டமளிக்கப்பட்ட அல்லது பொருத்தமான தகமைகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் குறித்துக் காட்டுகின்றது. இரு குறித்த வருட உள்ளெடுப்பிற்கு மேற்கோளைக் காட்டவில்லை.*

**மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட நிறைவேற்று டிப்புளோமா பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர் செயலாற்றல்: 2013 – 2017**




*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு, 2013 - 2017, IHRA*

### 3.1.4 டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்

மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் மூன்று வகையான டிப்புளோமாக்கள் வழங்கப்படுகின்றன. இது முகாமைத்துவம், மானுடவியல் மற்றும் மொழி நிகழ்ச்சித் திட்டங்களை கொண்டிருக்கின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்ப மட்டங்களில் உள்ள பரீட்சார்த்திகளை அவர்களின் குறித்த துறைகளில் மேம்பட்ட அறிவு, பகுப்பாய்வுச் சிந்தனை, திறன்களைக் கட்டமைக்க, நெறிமுறைத் தரநிலைகள் மற்றும் தலைமைத்துவம் மற்றும் பொறுப்புக்களை மேம்படுத்துவதற்கு வசதியளிக்கும் பொருட்டு வடிவமைக்கப் படுகின்றன. இந்த டிப்புளோமாக்கள் வித்தியாசமான மாணவர்களுக்கு அவர்களின் பல்வேறு தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்கு அநுகூலமானதாக உள்ளன. சில சமயங்களில் இது கல்விசார் கற்கையின் பல்வேறு அவத்தைகள் அல்லது மேலதிக தொழில் வாண்மைப் பயிற்சிகள் மற்றும் தகமைகளை வழங்குவதற்கும் இடையேயான இடைவெளியை நிரப்புவதற்கு ஒரு பாலமாக சேவையாற்றுகின்றது. ஒரு டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டம் பெறுமதியான சிறப்படைந்த திறன்கள், அறிவு, மற்றும் அனுபவங்களை வழங்க முடியும்.


வருட காலப் பகுதியில் வெளித் தரப்பினருடனான சில கூட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை ஓட்டத்திலிடும் பொருட்டு கைவிடப்பட்டன. அதன் காரணமாக, 2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மாணவர் உள்ளெடுப்பு 54% ற்கு குறைவடைந்தது. 2017 ஆம் ஆண்டில், ஒரு மேலதிக மொழியாக தமிழில் டிப்புளோமா கற்கைக்கு 96 மாணவர்கள் பதிவு செய்தனர். வருட காலப் பகுதியில் டிப்புளோமா பதிவுகளில் 24% ஆண்கள் பதிவுடன் ஒப்பிடுகின்ற போது பெண்களின் பதிவு கிட்டத்தட்ட 76% ஆக இருந்தது.

**மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட டிப்புளோமா பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர் செயலாற்றல்: 2013 – 2017**

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | வருடாந்த உள்ளெடுப்பு | | | | | தகுதிவாய்ந்த மாணவர்களின் எண்ணிக்கை[4] | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| 1 | சேவை முகாமைத்துவத்தில் டிப்புளோமா | - | 74 | 58 | 20 | - | - | 64 | 23 | 37 | - |
| 2 | போதைப் பொருள் துஷ்பிரயோக முகாமைத்துவத்தில் டிப்புளோமா | 44 | - | 50 | - | - | 11 | 25 | - | - | - |
| 3 | ஆலோசனை உழவியலில் டிப்புளோமா | 25 | 50 | 34 | - | - | 28 | 25 | 36 | 23 | 55 |
| 4 | ஒரு மேலதிக மொழியாக தமிழில் டிப்புளோமா | 120 | 120 | 163 | 124 | 96 | 96 | - | 124 | 123 | 100 |
| 5 | தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் டிப்புளோமா | - | 57 | - | - | - | - | 25 | 10 | 13 | - |
| 6 | முகாமைத்துவத்தில் டிப்புளோமா | - | - | 22 | 34 | - | - | - | 11 | 10 | - |
| | **மொத்தம்** | **189** | **301** | **327** | **178** | **96** | **135** | **139** | **204** | **206** | **155** |

*[4] அட்டவணை/ விளக்கப்படத்தில் காட்டப்படட இந்த தரவு வருட காலப் பகுதியில் பட்டமளிக்கப்பட்ட அல்லது பொருத்தமான தகமைகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் குறித்துக் காட்டுகின்றது. இரு குறித்த வருட உள்ளெடுப்பிற்கு மேற்கோளைக் காட்டவில்லை.*

**மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட டிப்புளோமா பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர் செயலாற்றல்: 2013 – 2017**




*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு, 2013 - 2017 IHRA*

### 3.1.5 சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள்


மனித வள மேம்பாட்டு நிறுவனம் தொழில் வாண்மை வளர்ச்சியை நோக்கி கற்போர்களை பல்வேறு துறைகளில் வளர்ப்பதற்கு சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகின்றது. 2017 ஆம் ஆண்டில், 08 சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. மனித வள மேம்பாட்டு நிறுவனம் 30 வருடங்களுக்கு மேலாக ஆங்கிலத்தில் சான்றிதழ் மட்ட கற்கைநெறிகளை வழங்கி வருகின்றது. ஐந்து கற்கைநெறிகள் பல்வேறு மட்டங்களில் ஆங்கிலத்திலான கற்கநைெறிகளாக இருந்தன. சான்றிதழ் நிகழ்ச்சித் திட்ட மாணவர்களிடையே, 84% மாணவர்கள் ஆங்கில மொழி கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்யப்பட்டு இருந்தனர். இதற்கு மேலதிகமாக, தமிழ் மொழியில் ஒரு கற்கைநெறி, முகாமைத்துவத்தில் ஒரு கற்கைநெறி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு கற்கைநெறியும் நடாத்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில், மொத்த உள்வாங்கல் 3348 மாணவர்களாக இருந்ததுடன் அவர்களில் 66% பெண் மாணவர்களாக இருந்தனர்.


**மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர் செயலாற்றல்: 2013 – 2017**

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | வருடாந்த உள்ளெடுப்பு | | | | | தகுதிவாய்ந்த மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| 01 | ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கைநெறி | 2737 | 2206 | 2149 | 1321 | - | 2392 | 1665 | 1688 | - | 986 |
| 02 | ஆங்கிலத்தில் அடிப்படைக் கற்கைநெறி | 141 | 259 | 187 | 217 | - | 229 | 132 | 120 | - | 143 |
| 03 | ஆசிரியர்களுக்கான ஆங்கில சான்றிதழ் கற்கைநெறி | 74 | 99 | 99 | 67 | - | 71 | 67 | 62 | - | 55 |
| 04 | பேச்சு ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கைநெறி | 570 | 1707 | 1705 | 3637 | 1933 | 540 | 544 | 1261 | 2706 | 1471 |
| 05 | பாடசாலையை விட்டு விலகிய வர்களுக்கான ஆங்கிலத்தில் | 60 | 215 | 251 | 130 | 54 | - | 45 | 314 | - | 45 |
| 06 | கணினி பிரயோகங்களில் சான்றிதழ் கற்கைநெறி | 471 | 549 | 354 | 452 | - | 167 | 213 | 246 | 320 | 336 |
| 07 | தமிழ் மொழியில் சான்றிதழ் கற்கைநெறி - அடிப்படை | 749 | 658 | 316 | 341 | 405 | 503 | - | 411 | 242 | 203 |
| 08 | தமிழ் மொழியில் சான்றிதழ் கற்கைநெறி - இடைநிலை | 251 | 322 | 262 | 160 | 145 | 197 | - | 200 | 159 | 109 |
| | **மொத்தம்** | **5053** | **6015** | **5323** | **6325** | **2537** | **4099** | **2666** | **4302** | **3427** | **3348** |

*5 அட்டவணை/ விளக்கப்படத்தில் காட்டப்படட இந்த தரவு வருட காலப் பகுதியில் பட்டமளிக்கப்பட்ட அல்லது பொருத்தமான தகமைகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் குறித்துக் காட்டுகின்றது. இரு குறித்த வருட உள்ளெடுப்பிற்கு மேற்கோளைக் காட்டவில்லை.*

**மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர் செயலாற்றல்: 2013 – 2017**




*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு, 2013 - 2017, IHRA*

## 3.2 2017 ஆம் ஆண்டில் பயிற்சி செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்

| (இ) | பல்கலைக்கழக தாபனக் கோவையின் XX அத்தியாயத்தின் பிரிவுகள் 3.1 மற்றும் 3.2 | நிறுவகத்தின் கல்விசார் மற்றும் கல்வி சாராத அனைத்து உத்தியோகத்தர்களும் உள்வருகை வெளிச் செல்லல் நேரங்களை பதிவு செய்ய வேண்டுமெனினும் கல்விசார் பதவியணியை சேர்ந்த 10 உத்தியோகத்தர்களின் வருகையை உறுதிபடுத்தாமல் ரூபா 36,786,564 இற்காக சம்பளம் மற்றும் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2004 ஜூலை 29 ஆம் திகதி பீஎ்ம / 25 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது காணப்பட்ட ரூபா 155,451,216 இற்கான நிலையான வைப்புக்களுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |
| (உ) | 2004 ஜனவரி 26 ஆம் திகதியில் புசு / 01 இலக்கம் கொண்ட தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைச் சபையின் சுற்றறிக்கை | 2017 திசெம்பர் 31திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ரூபா 5,572,787 தொகை பெறுமதியான நூலக புத்தகங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. |

3. **நிதி மீளாய்வு**

3.1 **நிதி விளைவுகள்**

சமர்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 42,996,700 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 61,576,424 தொகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 18,579,724 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டியது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சம்பளங்கள் மற்றும் படிச் செலவுகள் ரூபா 25,094,713 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டில் காணப்பட்ட ரூப 15,174,119 இற்கான மிகை தளம்பலுடன் 2017 ஆண்டளவில் ரூபா 42,996,700 தொகை ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம், பெறுமானத் தேய்வு மற்றும் அரசுக்கு செலுத்திய வரி மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 49,810,791 தொகையான நிறுவகத்தில் பங்களிப்பு 2014 ஆண்டின் போது ரூபா 47,458,572 தொகை வரை 5 சதவீதத்தால் குறைந்திருந்த போதிலும் 2015 ஆண்டு முதல் இடையறாது வளர்ச்சியடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 114,264,804 தொகை வரை வளர்ச்சி அடைந்திருந்தது.

4. **செயற்பாட்டு மீளாய்வு**

4.1 **செயலாற்றுகை**

4.1.1 **செயல் ஆற்றல் மற்றும் மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தினால் நடாத்தப்படகின்ற 01 ஆரம்ப பட்டதாரி பாட நெறி (Undergraduate) 05 பட்டப் பின்படிப்பு பட்டதாரி பாடநெறி (Postgraduate) களும் 07 உயர் பாடநெறிகளும் (Executive/ Higher ) 10 டிப்ளோமா பாடநெறிகளும் (Diploma) மற்றும் 22 சான்றிதழ் பாடநெறிகளும் (Certificate) என ஒட்டு மொத்த 45 பாடநெறிகள் காணப்பட்டன. எனினும் 2017 ஆண்டிற்காக 36 பாடநெறிகளுக்கு மாணவர்கள் பதிவு செய்திருக்காததுடன் இவற்றில் 11 பாடநெறிகளுக்காக 5 வருடங்கள் முதல் மாணவர்கள் பதிவு செய்திருக்கவில்லை. எவ்வாறாயினும்

7

மீளாய்வாண்டளவில் 45 பாடநெறிகளில் 22 பாடநெறிகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மாணவர்கள் சேர்ப்தற்காக துணை விதிகள் மற்றும் பிரமாணங்கள் அங்கீகரிக்கும் வரை அந்த பாடநெறிகள் பிற்போடப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டது.

(ஆ) 2016 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் போது பாட நெறிகளுக்காக பதிவு செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 3816 இனால் குறைவடைந்ததுடன் அது 52 சதவீதத்தினால் குறைவடைதலாகும்.

(இ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய 54 செய்பணிகள் காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிறைவேற்ற முடியாமல் போன 19 கருமங்கள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிறுவனத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 07 பிரதான குறிக்கோள்களின் கீழ் இலக்கு (Goals) மற்றும் தந்திரோபாயம் (Strategy) உட்படுத்தித் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு குறிக்கோளுக்கான தந்திரோபாயங்களுக்காக மாத்திரம் பாதீட்டு மதிப்பீடு காட்டப்பட்டிருந்தது. ஏனைய குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பாதீட்டு மதிப்பீடு காட்டி இருக்கவில்லை.

(உ) வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்துடன் மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரித்து சமர்பித்திருக்கவில்லை.

(ஊ) நிறுவனத்தினால் சமர்பிக்கப்பட்டிருந்த முன்னேற்ற அறிக்கை செயல் நடவடிக்கை திட்டத்திற்கு இணங்க தயாரித்திருக்காததுடன் அதன் கருமங்கள் நிறை வேற்றப்பட்ட காலப்பகுதி மற்றும் செலவிடப்பட பணம் தொடர்பாக குறிப்பிட்டிருக்கவில்லை அதன் காரணமாக செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிட்டுள்ள கடமைகள் திட்டமிட காலப்பகுதிகளில் மற்றும் மதிப்பீட்டு செலவு வரையரையுள் நிறைவேற்றப்பட்டதா என உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 4.2 பதவியணி நிருவாகம்

நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளின் எண்ணிக்கை 98 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 73 ஆக காணப்பட்டமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 25 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணிப் பதவிகளில் வெற்றிடங்களுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் சேர்க்கப்படாமல் 2017 ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் 25 நிகழ்ச்சித்திட்ட

9

உதவியாளர்களும் வேலை உதவியாளர் ஒருவரும் ஆக 26 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

5. **நிலைபேறான அபிவிருத்தி**

5.1 **நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குதல்**

2017 ஆகஸ்ட் 14 திகதி என்ஜி / எஸ்பீ / எஸ்டீஜி / 17 கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரினால் வெளியிடப்பட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல் இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களிலும் செயற்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டு தொடர்பாக மனிதவள முன்னேற்ற நிறுவகத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ் வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

6. **கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

6.1 **நிதிக் கூற்றுக்கள் சமர்பித்தல்**

2003 ஜுன் 02 திகதி பீசீடீ / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மே 04 திகதி சமர்பிக்கப்பட்டிருந்தது.

6.2 **பெறுகை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பந்தியின் பிரகாரம் பெறுகை திட்டத்தில் தொடர்ந்து வரும் வருடத்திற்கான பெறுகை அலுவல்கள் விரிவாக தயாரித்திருக்காததுடன் திட்டத்தில் ஏற்படும் மாற்றங்களை மீளாய்வு செய்து அடிக்கடி நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகை திட்டத்தில் அடங்கியுள்ள ரூபா 13,635,350 தொகை பெறுமதியான பண்டங்கள் , 08 வேலைகள் மற்றும் சேவைகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் பெறுகைகள் திட்டத்தில் அடங்கியிருக்காத ரூபா 974,562 தொகை பெறுமதியான 12 கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

9

(இ) பெறுகை திட்டத்தில் அடங்கியுள்ள 02 பெறுகை விடயங்களுக்காக மதிப்பீட்டு தொகையை மிகைத்து ரூபா 3,444,809 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் அதன் முரண் 134 சதவீதமாகும்.

### 6.3 பாதீட்டு கட்டுபாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான பெறுமதிகளை இணக்கஞ் செய்த போது வருமானம் ரூபா 72,363,395 இனால் அதாவது 44 சதவீதத்தினால் முரண்பட்டுக் காணப்பட்டதுடன் ஏனைய செயற்பாட்டு செலவுகள் ரூபா 45,902,486 இனால் அதாவது 94 சதவீதத்தினால் முரண்பட்டிருந்தது.

### 6.4 உள்ளக கணக்காய்வு

கொழும்பு பல்கலை கழகத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மனித வள முன்னேற்ற நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு மேற் கொள்ளப்பட்டிருந்தது. 2017 ஆண்டு தொடர்பாக சமர்பித்திருந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சி திட்டத்தின் பிரகாரம் 2017 ஆண்டின் போது நிறுவனத்தினால் 13 விடயங்களை கணக்காய்வு செய்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் அவற்றில் இரண்டு விடயங்கள் மாத்திரம் கணக்காய்வு செய்திருந்தமையால் நிறுவகத்தில் போதியளவு உள்ளக கணக்காய்வு ஒன்று நடைபெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 6.2 தீர்கப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படகின்றன.

(அ) நிறுவனத்தினால் 2014 ஆண்டின் போது ஊடாக மற்றும் செவிமடுத்தல் பார்வை சார்ந்த வடிவமைத்தல் டிப்ளோமா ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த பாடநெறிகள் நடாத்துவதற்காக நிறுவனத்தில் விஷேடத்துவ அறிவு உடைய விரிவுரையாளர்கள் காணப்படாமையால் 2014 ஆண்டின் பின்னர் பாடநெறிகளுக்காக மாணவர்கள் சேர்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஜுன் 01 திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய கலை அரங்கில் நடைபெற்ற டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் விழாவிற்காக பயன்படுத்தப்பட்ட நிறுவனத்திற்கு சொந்தமான ரூபா 69,900 தொகை பெறுமதியான மடிகணினி காணாமல் போயிருந்ததுடன் அது தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டு நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

11

(இ) நிறுவகத்தில் நிருவாக மற்றும் கல்வி அலுவல்களுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் அமைந்துள்ள 27.86 பர்சஸ் காணி கொழும்பு பல்கலைகழகத்திற்கு சொந்தமானதுடன் அந்த காணியின் உரிமையை உரித்தாக்கி பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

7. **முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுபாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பாதீட்டு கட்டுபாடு | பாதீட்டை அடிக்கடி மீளாய்வு செய்து ஆக்கபூர்வமான கட்டுபாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்படாமை. |
| (ஆ) முதலீட்டு முகாமைத்துவம் | முதலீடுகள் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்காமை. |
| (இ) பெறுகை | பெறுகை திட்டம் நாளதுவரை பேணப்படாமை |
| (ஈ) வாகனக் கட்டுபாடு | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரிசோதனை செய்யாமை, வாகனங்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்படாமை, வாகனங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளாமை, ஓட்ட அட்டவணைகள் மற்றும் பிரயாணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்புகளில் தகவல்கள் உட்படுத்தப்படாமை. |
| (உ) பாடநெறிகள் நடாத்துதல் | துணை விதிகள் மற்றும் பிரமாணங்களை அங்கீகரிக்காமல் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருத்தல். |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

11

**கொழும்பு பல்கலைகழகத்துடன் இணைந்த மனித வள முன்னேற்ற நிருவகத்தின் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1979 இன் 11 ஆம் இலக்க மனித வள முன்னேற்ற நிறுவக நெறிமுறைகளின் பிரிவு 23 மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|
| 2.<br>2.1 | **நிதிக் கூற்றுக்கள் முனைப்பழியுள்ள அபிப்பிராயம்** | இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, கொழும்பு பல்கலைக் கழகத்துடன் இணந்து மனிதவள முன்னேற்ற நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும். | உடன்பட்டது | |
| 2.2<br><br>2.2.1 | **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**<br><br>**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்** | **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**<br><br>காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 316,565 இற்கான வைப்பு பணம் உள்பாய்ச்சலின் கீழ் ரூபா 1,838,400 தொகை பெறுமதியான நூலக வைப்புகளின் பெறுமதியும் உட்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறு இருக்கும் போது மீண்டும் அப் பெறுமதி நூலக வைப்பு பணம் உள்பாய்ச்சல் என தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் சீராக்கல் செய்யப்பட்டிருந்தமையால் செயற்பாட்டு தொழிற்பாடுகளின் கீழ் தேறிய பணம் உள்பாய்ச்சல் அந்த பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது. தேறிய பணம் உட்பாய்ச்சல் அதே பெறுமதியால் மிகையாக காட்டப்பட்டள்ளது. | இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 2 யைப் பின்பற்றுவதற்கு குறிப்பிடப்பட்டது | 2018 ஆண்டிலிருந்து கணக்கீட்டு நியம இலக்கம் 2 ற்கு இசைவுறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| 2.2.2 | **கணக்கீட்டு கொள்கைகள்** | கணணிகள் மென் பொருள் அருவச் சொத்துக்கள் என இனங்கண்டு கணக்கீடு செய்வதாகும். காலத்தேய்மானம் செய்வதற்கும் நிறுவனத்தினால் கணக்கீட்டு கொள்கையொன்று இனங்கண்டிருக்காததுடன் நிலையான சொத்துக்களின் கீழ் வருடாந்தம் 20 சதவீம் பெறுமானத் தேய்வு கழித்திருந்த போதிலும் பெறுமானத்தேய்வு விதிகதம் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும், பெறுமானத் தேய்வு அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா 252,257 தொகை எனினும் நிதி செயலாற்றுகை கூற்றில் அப் பெறுமதி ரூபா 448,257 தொகை என காட்டப்பட்டிருந்தது. | | 2018 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்கில் உள்ள தவறை திருத்துவதற்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்கில் உள்ள தவறை திருத்துவதற்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. |
| 2.2.3 | **கணக்கீட்டு குறைபாடுகள்** | பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | |
| | | (அ) | மூலதன மானியங்களில் இருந்து தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொல்வனவு செய்வதற்காக ரூபா 7,473,859 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் செலவு செய்யப்படாத மூலதன கணக்கில் இருந்து செலவு செய்யப்பட்ட மூலதன கணக்கிற்கு ரூபா 7,607,891 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தமையால் செலவு செய்யப்பட்ட மூலதன கணக்கு ரூபா 134,031 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | ரூபா. 134032 தொகையுடைய தளபாடங்கள் மற்றும் கட்டடங்களில் நிலையாகப் பொருத்தப்படும் தளபாடங்களின் கொள்வனவு உருவாக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், இத்தொகை தவறாக செலவு செய்யப்படாத மூலதனக் கொடையிலிருந்து இடமாற்றப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் உள்ள இத்தவறை திருத்துவதற்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டுக்கான 37 ஆம் இலக்க நாளேட்டுப் பதிவின் கீழ் இது திருத்தப்பட்டிருந்தது, |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|
| | (ஆ) | பெறுமானத் தேய்வு அட்டவணையின் பிரகாரம் வாகனங்களுக்காக ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 2,949,375 தொகை எனினும் நிதி செயலாற்றுகை கூற்றில் ரூபா 724,375 தொகை எனக் காட்டப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் உள்ள இத்தவறை திருத்துவதற்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் உள்ள இத்தவறை திருத்துவதற்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. |
| | (இ) | முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட சொத்துகளுக்காக காலத் தேய்மானம் கணிப்பதற்கு முடியாது எனினும் நிறுவனத்தினால் முற்றாக பெறுமனத் தேய்வு கழிக்கப்பட சொத்துக்கள் மீண்டும் மீள் மதிப்பீடு செய்து அந்த மீள்மதிப்பீட்டின் பெறுமதி மீது மீண்டும் காலத் தேய்மானம் கணிக்கப்பட்டிருந்தது. அதனால் காலத்தேய்மானம் பெறுமதி மற்றும் செலவிடப்பட்ட முலதன மானியக் கணக்கின் மீதி சரியானதாக காணப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் உள்ள இதனை திருத்துவதற்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் உள்ள இதனை திருத்துவதற்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. |
| | (ஈ) | 2017 ஆண்டளவில் முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருக்காத இரண்டு வாகனங்களுக்காக காலத் தேய்மானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் உள்ள இதனை திருத்துவதற்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் உள்ள இதனை திருத்துவதற்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. |
| | (உ) | 2017 ஆண்டு தொடர்பாக ரூபா 1,557,168 இற்கான செலவுகள் 2018 ஆண்டின் போது செலுத்தியிருந்த போதிலும் இப் பெறுமதி அடுறு செலவுகள் என இனங்கண்டிருக்காமையால் ஆண்டிற்கான மிகை அப் பெறுமதியில் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிலிருந்து திரண்ட செலவுகளை அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திரண்ட செலவுகளை அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|
| 2.3 | **சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்** | பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) | **சட்டங்கள் விதிகள், பிரமாணங் கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு**<br><br>1985 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு மற்றும் 16 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு | நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்காக உரிய தினங்களில் பங்களிப்புத் தொகை செலுத்தியிருக்காமையால் இரண்டு ஆண்டுகள் தொடர்பாக ஊழியரினால் செலுத்தப்பட வேண்டிய 8 சதவீதம் பங்களிப்புத் தொகை மற்றும் மிகை விதிப்பாகக் கூட்டுத்தொகை ரூபா 8,982,751 தொகை மீளாய்வாண்டின் போது நிறுவகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | மனித வள முன்னேற்ற நிறுவக கல்விசார் உத்தியோகத்தர்கள் 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து ஒப்பந்த அடிப்படையிலான பணியாளர்களுக்கு பணியாளர் ஏற்பாட்டு நிதியம் மற்றும் பணியாளர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு தீர்மானம் மேற்கொண்டனர். மேலும், பணியாளர் நம்பிக்கைப் பொறுப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் விளைவாக தண்டப்பணம் விதிக்கப்பட்டு அது செலுத்தப்பட்டது. தற்போது, குறிப்பிட்ட பணியாளர்களுக்கான பணியாளர் ஏற்பாட்டு நிதியம் மற்றும் பணியாளர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குப் பணஞ் செலுத்துவதற்காக உரிய நேரத்தில் உரிய அதிகாரிகளுக்கு பணம் அனுப்பப்படுகின்றது. | தற்போது, குறிப்பிட்ட பணியாளர்களுக்கான பணியாளர் ஏற்பாட்டு நிதியம் மற்றும் பணியாளர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குப் பணஞ் செலுத்துவதற்காக உரிய நேரத்தில் உரிய அதிகாரிகளுக்கு பணம் அனுப்பப்படுகின்றது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவை | | | | |
| | i | நிதிப் பிரமாணம் 110 | சேதங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும் எனினும் அவ்வாறான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தற்போது இழப்புகள் தொடர்பான பதிவேடு திறக்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டிலிருந்து இப்பதிவேட்டினை முறையாகப் பேனுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | II | நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2015 ஜுன் 14 ஆம் திகதிய 03/2015 இலக்கம் கொண்ட பொது நிதி சுற்றறிக்கை | முற்பணங்கள் வழங்குவது முற்றாக நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட வேண்டும் எனினும் நிறைவேற்று தரம் அல்லாத 14 உத்தியோகத்தர்களுக்கு 179 சந்தர்ப்பங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 2,905,666 இற்கான முற்பணத் தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. | காசு முற்பணங்கள் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு வழங்குவது தொடர்பில் வரையறை செய்யப்பட்டுள்ளது. | பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2015 ஜுலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டது. |
| | | | முற்பணம் குறிப்பிட்ட கருமத்தை விரைவாக முடித்து தீர்க்கப்பட வேண்டுமெனினும் 24 சந்தர்பங்களில் பெற்றிருந்த கூட்டுப்பெறுமதி 307,640 இற்கான முற்பணத்தை தீர்ப்பதில் 18 நாட்கள் முதல் 170 நாட்கள் வரையான கால தாமதமாகி இருந்தது. | காசு முற்பணங்கள் உரிய நேரத்தில் செலுத்தப்பட்டன. | முற்பனக் கொடுப்பனவுகள் விதித்துரைக்கப்பட்டுள்ள காலப் பகுதியினுள் இசைவுற மேற்கொள்ளப்பட்டன. |
| | III | நிதிப் பிரமாணம் 751 மற்றும் 757 | மீளாய்வாண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 758,762 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியாக நிறுவகத்தில் காணப்படவில்லை எனவும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அடங்காத ஆனால் பெறுமதி இனங்காணப்படாத 347 விடயங்கள் பௌதீக ரிதியாக நிறுவகத்தில் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது. | முந்திய ஆண்டுக்கான கணக்கெடுப்புக்கு இணங்க, பராதீனமாக பௌதீகரீதியாக அகற்றப்பட்ட பொருட்கள் இருப்பேட்டுப் புத்தகங்களிலிருந்து அழிக்கப்பட்டிருக்கவில்லை அல்லது சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, இப்பொருட்களின் விபரங்கள் இருக்கின்ற பொருட்களாக காட்டப்பட்டன. ஆனால், இப்பொருட்கள் நிறுவகத்தில் பௌதீகரீதியில் கிடைக்க்க்கூடியதாக இருக்கவில்லை. நிலையான சொத்துகளின் பதிவேட்டில் உள்ளடக்கப்படாததும் கணக்கெடுப்பின் ஊடாக பௌதீகரீதியாக அடையாளங்காணப்படாததுமான 347 பொருட்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இருப்பேடு சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| | IV | நிதிப் பிரமாணம் 756 (2) | வருடாந்த பண்டக் கணிப்பீட்டு குழு அங்கத்தவர்கள் இருவரைக் கொண்டிருக்க வேண்டும் எனினும் கணிணி விடயங்கள் தொடர்பாக கணிப்பிட்டு அறிக்கையின் பிரகாரம் ஒரு நபரின் பங்கு பற்றலுடன் மாத்திரம் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டுகளில் நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க செயற்படுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க செயற்படுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| | V | நிதிப் பிரமாணம் 770 | 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் பண்ட கணிப்பீட்டு சபையினால், பயன்படுத்த முடியாத அகற்றுவதற்கு விதந்துரைக்கப்பட்ட ரூபா 2,859,260 தொகை பெறுமதியான 04 வகையான பண்டங்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2018 ஜூன் 22 திகதி வரையும் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | 90% உபயோகமற்ற பொருட்கள் ஏற்கனவே அகற்றப்பட்டுள்ளன. | எஞ்சியுள்ள 10% உபயோகமற்ற பொருட்கள் அகற்றப்பட்டுவருகின்றன. |
| | (இ) | பல்கலைக்கழக தாபனக் கோவையின் xx அத்தியாயத்தின் பிரிவுகள் 3.1 மற்றும் 3.2 | நிறுவகத்தின் கல்விசார் மற்றும் கல்வி சாராத அனைத்து உத்தியோகத்தர்களும் உள்வருகை வெளிச் செல்லல் நேரங்களை பதிவு செய்ய வேண்டுமெனினும் கல்விசார் பதவியணியை சேர்ந்த 10 உத்தியோகத்தர்களின் வருகையை உறுதிபடுத்தாமல் ரூபா 36,786,564 இற்காக சம்பளம் மற்றும் படி செலுத்தப்பட்டிருந்தது. | விரிவுரையாளர்கள் விரிவுரைகள் பற்றிய அவர்களது விரிவுரைக்குறிப்புகளை பதிகின்றனர். விரிவுரைகள் வழங்கிய விரிவுரையாளர்களின் பதிவுகளைப் பேணல் | விரிவுரைகள் தொடர்பான உள்ளகப் பதிவுகள் பேணப்படுகின்றன. விரிவுரையாளர்களின் வரவுப் புத்தகம் பேணப்படுகின்றது. |
| | (ஈ) | 2004 ஜுலை 29 ஆம் திகதி பீஎ்டீ / 25 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது காணப்பட்ட ரூபா 155,451,216 இற்கான நிலையான வைப்புக்களுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | 138 மில்லியன் பெறுமதியான நிலையான இருப்புகளுக்கான அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டள்ளது. மிகுதித் தொகைக்கான அங்கீகாரம் திறைசேரியிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. | எஞ்சிய இருப்புகளுக்கான அங்கீகாரத்தினைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| | (உ) | 2004 ஜனவரி 26 ஆம் திகதியில் புசு / 01 இலக்கம் கொண்ட தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைச் சபையின் சுற்றறிக்கை | 2017 திசெம்பர் 31திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ரூபா 5,572,787 தொகை பெறுமதியான நூலக புத்தகங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | முன்னர் வாசிகசாலை நிறுவகத்திற்கு வெளியே அமைந்திருந்தது. அது இப்போது நிறுவகத்தினுள் மீளமைக்கப்பட்டுள்ளது. மனித வள முன்னேற்ற நிறுவகம் இடப்பற்றாக்குறை காரணமாக கடுமையான கஸ்டங்களை எதிர்நோக்கி வருகின்றது. சேதமடைந்த பொருட்களை வாசிகசாலையிலிருந்து அகற்றும் தொடர்ச்சியான செயன்முறை 2017 நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது இன்று வரை தொடர்கின்றது. ஆகையால், 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆந் திகதியிலிருந்து ஆண்டு முடிவுக்கான வாசிகசாலைப் புத்தகங்கள் சரிசெய்யப்பட முடியவில்லை. இந்த நிலைமை ஸ்திரமாகின்ற போது வாசிகசாலைப் புத்தகங்கள் தொடர்பான கணக்கெடுப்பினை நடத்தும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. | 2018 ஆம் ஆண்டுக்கான வாசிகசாலைப் புத்தகங்களின் கணக்கெடுப்பு நடத்தப்படும் |
| 3<br>3.1 | **நிதி மீளாய்வு**<br>**நிதி விளைவுகள்** | | சமர்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 42,996,700 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 61,576,424 தொகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 18,579,724 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டியது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சம்பளங்கள் மற்றும் படிச் செலவுகள் ரூபா 25,094,713 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.<br><br>மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டில் காணப்பட்ட ரூப 15,174,119 இற்கான மிகை தளம்பலுடன் 2017 ஆண்டளவில் ரூபா 42,996,700 தொகை ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம், பெறுமானத் தேய்வு மற்றும் அரசுக்கு செலுத்திய வரி மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 49,810,791 தொகையான நிறுவகத்தில் பங்களிப்பு 2014 ஆண்டின் போது ரூபா 47,458,572 தொகை வரை 5 சதவீதத்தால் குறைந்திருந்த போதிலும் 2015 ஆண்டு முதல் இடையறாது வளர்ச்சியடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 114,264,804 தொகை வரை வளர்ச்சி அடைந்திருந்தது. | உடன்பட்டது | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| 4. | செயற்பாட்டு மீளாய்வு | பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | |
| 4.1 | செயலாற்றுகை | (அ) | நிறுவனத்தினால் நடாத்தப்படகின்ற 01 ஆரம்ப பட்டதாரி பாட நெறி (ருனெநசபசயனரயவந) 05 பட்டப் பின்படிப்பு பட்டதாரி பாடநெறி (்ழளவபசயனரயவந) களும் 07 உயர் பாடநெறிகளும் (நுஒநஉரவளைந.'. ர்பைாநச ) 10 டிப்ளோமா பாடநெறிகளும் (னுipடழஅய) மற்றும் 22 சான்றிதழ் பாடநெறிகளும் (ஊநசவகைiஉயவந) என ஒட்டு மொத்த 45 பாடநெறிகள் காணப்பட்டன. எனினும் 2017 ஆண்டிற்காக 36 பாடநெறிகளுக்கு மாணவர்கள் பதிவு செய்திருக்காததுடன் இவற்றில் 11 பாடநெறிகளுக்காக 5 வருடங்கள் முதல் மாணவர்கள் பதிவு செய்திருக்கவில்லை. எவ்வாறாயினும் மீளாய்வாண்டளவில் 45 பாடநெறிகளில் 22 பாடநெறிகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மாணவர்கள் சேர்ப்பதற்காக துணை விதிகள் மற்றும் பிரமாணங்கள் அங்கீகரிக்கும் வரை அந்த பாடநெறிகள் பிற்போடப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டது. | சில கற்கைநெறிகள் கல்வி சார் உத்தியோகத்தர்களின் விதப்புரைக்கினங்க இடைநிறுத்தப்பட்டன. சில ஏனைய கற்கைநெறிகள் உப சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அங்கீகாரம் பெறும்வரை பிற்போடப்பட்டன. மனித வள முன்னேற்ற நிறுவகம் அதன் வளங்கள் மற்றும் வேலை வலுவை அதியுச்சமாக பயன்படுத்துவதன் மூலம் நிறுவகத்திற்கான நிதிப் பெறுகைகளை வழங்குகின்ற கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்தது. | 2018 ஆம்ஆண்டில் ஏறக்குறைய 4856 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். |
| | | (ஆ) | 2016 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் போது பாட நெறிகளுக்காக பதிவு செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 3816 இனால் குறைவடைந்ததுடன் அது 52 சதவீதத்தினால் குறைவடைதலாகும். | கல்வி சார் உத்தியோகத்தர்கள் குறித்த சில பட்டப்பின் படிப்பு, டிப்ளோமா/நிறைவேற்றுத்தர டிப்ளோமா கற்கைநெறிகளை இயைபுடைய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட உப சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வரை தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கு தீர்மானித்தனர். ஆதலால், இக்கற்கைநெறிகளின் பதிவு நிறுத்தப்பட்டன. மேலும், ஆங்கிலக் கற்கை நெறி விரிவுரைகளை நடத்துவதற்கு தேஸ்டன் கல்லூரியில் போதிய இடம் காணப்படவில்லை. | நிறுவகத்தின் வளங்கள் மற்றும் தேசியத் தேவையைக் கருத்தில் எடுக்கின்ற அதேவேளை சில கற்கைநெறிகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|
| | (இ) | மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய 54 செய்பணிகள் காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிறைவேற்ற முடியாமல் போன 19 கருமங்கள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | 2018 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாட்டுத் திட்டத்தினுள் முக்கியமான செயலாற்றுகைக் குறிகாட்டிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | செயலாற்றுகைக் குறிகாட்டிகள் பின்பற்றப்படும் |
| | (ஈ) | நிறுவனத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 07 பிரதான குறிக்கோள்களின் கீழ் இலக்கு (Goals) மற்றும் தந்திரோபாயம் (Strategy) உட்படுத்தித் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு குறிக்கோளுக்கான தந்திரோபாயங்களுக்காக மாத்திரம் பாதீட்டு மதிப்பீடு காட்டப்பட்டிருந்தது. ஏனைய குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பாதீட்டு மதிப்பீடு காட்டி இருக்கவில்லை. | இது 2018 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. | இது 2018 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. |
| | (உ) | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்துடன் மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரித்து சமர்பித்திருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டுக்கான மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | |
| | (ஊ) | நிறுவனத்தினால் சமர்பிக்கப்பட்டிருந்த முன்னேற்ற அறிக்கை செயல் நடவடிக்கை திட்டத்திற்கு இணங்க தயாரித்திருக்காததுடன் அதன் கருமங்கள் நிறை வேற்றப்பட்ட காலப்பகுதி மற்றும் செலவிடப்பட பணம் தொடர்பாக குறிப்பிட்டிருக்கவில்லை அதன் காரணமாக செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிட்டுள்ள கடமைகள் திட்டமிட காலப்பகுதிகளில் மற்றும் மதிப்பீட்டு செலவு வரையரையுள் நிறைவேற்றப்பட்டதா என உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2018 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|
| 4.2 | **பதவியணி நிருவாகம்** | நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளின் எண்ணிக்கை 98 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 73 ஆக காணப்பட்டமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 25 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணிப் பதவிகளில் வெற்றிடங்களுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் சேர்க்கப்படாமல் 2017 ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் 25 நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களும் வேலை உதவியாளர் ஒருவரும் ஆக 26 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | 2017 ஆம் ஆண்டில் ஒரு விரிவுரையாளர், 11 முகாமைத்துவ உதவியாளர்கள், 2 வாசிகசாலை தகவல் உதவியாளர்கள், ஒரு பணி உதவியாளர், 2 தொழிலாளர் பதவிகள் நிரப்பப்பட்டன. | 2 முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடங்கள், ஒரு வாசிகசாலை தகவல் உதவியாளர், சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க இப்பதவிகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிரப்புவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும், எதிர்காலத்தில் ஒரு கணணி போதனாசிரியர், வாசிகசாலை பணியாளர் ஆகியோரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், 6 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான இயைபுடைய திட்டங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்க வேண்டும் என எதிர்பார்த்திருக்கின்றோம். |
| 5.<br>5.1 | **நிலைபேறான அபிவிருத்தி**<br>**நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குதல்** | 2017 ஆகஸ்ட் 14 திகதி என்ஜி / எஸ்பீ / எஸ்டீஜி / 17 கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரினால் வெளியிடப்பட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல் இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களிலும் செயற்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டு தொடர்பாக மனிதவள முன்னேற்ற நிறுவகத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ் வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை. | மனித வள முன்னேற்ற நிறுவகம் நிறுவகம் தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையாளங்கண்டுள்ளது. ஆத்துடன், நிலையான அபிவிருத்தி இலக்குகளின் உபாயங்களை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் வரைவுப்படுத்தப்படுகின்றன. 2018 – 2022 ஆம் ஆண்டுக்கான நிறுவன திட்டம் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளதுடன் இக்காலப்குதிகள் தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்குகள் அதில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. 2030 ஆம் ஆண்டின் 4,5,8 மற்றும் 16 ஆம் குறிக்கோள்கள் நிறுவகத்தின் நிறுவன திட்டத்துடன் நேரடியாகத் தொகுக்கப்பட்டுள்ளன. | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| **6.** | **கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்** | | | | |
| **6.1** | **நிதிக் கூற்றுக்கள் சமர்பித்தல்** | 2003 ஜுன் 02 திகதி பீஈடீ / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மே 04 திகதி சமர்பிக்கப்பட்டிருந்தது. | | உடன்பட்டது. | நிதிக் கூற்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **6.2** | **பெறுகை** | (அ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பந்தியின் பிரகாரம் பெறுகை திட்டத்தில் தொடர்ந்து வரும் வருடத்திற்கான பெறுகை அலுவல்கள் விரிவாக தயாரித்திருக்காததுடன் திட்டத்தில் ஏற்படும் மாற்றங்களை மீளாய்வு செய்து அடிக்கடி நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிலிருந்து கொள்வனவு திட்டத்தை மீளாய்வு செய்து நாளதுவரைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டுக்கான கொள்வனவுத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரைப்படுத்தப்பட்டுள் ளது. |
| | | (ஆ) | பெறுகை திட்டத்தில் அடங்கியுள்ள ரூபா 13,635,350 தொகை பெறுமதியான பண்டங்கள் , 08 வேலைகள் மற்றும் சேவைகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் பெறுகைகள் திட்டத்தில் அடங்கியிருக்காத ரூபா 974,562 தொகை பெறுமதியான 12 கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. | | கொள்வனவு திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரைப்படுத்தப்பட்டள் ளது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| | | (இ) | பெறுகை திட்டத்தில் அடங்கியுள்ள 02 பெறுகை விடயங்களுக்காக மதிப்பீட்டு தொகையை மிகைத்து ரூபா 3,444,809 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் அதன் முரண் 134 சதவீதமாகும். | இத்தவறு 2017 ஆம் ஆண்டுக்கான கொள்வனவு திட்டத்தை மீளாய்வு செய்து நாளதுவரைப்படுத்தாமையின் காரணமாக இடம்பெற்றுள்ளது. ஆகையால், 2018 ஆம் ஆண்டுக்கான கொள்வனவுத் திட்டத்தை நாளதுவரைப்படுத்தி மீளாய்வு செய்வதற்கான அறிவுறுத்தல் இயைபுடைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டுக்கான கொள்வனவுத் திட்டத்தை நாளதுவரைப்படுத்தி மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **6.3** | **பாதீட்டு கட்டுபாடு** | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான பெறுமதிகளை இணக்கஞ் செய்த போது வருமானம் ரூபா 72,363,395 இனால் அதாவது 44 சதவீதத்தினால் முரண்பட்டுக் காணப்பட்டதுடன் ஏனைய செயற்பாட்டு செலவுகள் ரூபா 45,902,486 இனால் அதாவது 94 சதவீதத்தினால் முரண்பட்டிருந்தது. | | முந்திய நிகழ்ச்சித்திட்டத்தின் மேன்மிகை வருமானமாக கணக்கில் எடுத்து நிகழ்ச்சித்திட்டக் கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமான மற்றும் செலவினத்தை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **6.4** | **உள்ளக கணக்காய்வு** | கொழும்பு பல்கலை கழகத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மனித வள முன்னேற்ற நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு மேற் கொள்ளப்பட்டிருந்தது. 2017 ஆண்டு தொடர்பாக சமர்பித்திருந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சி திட்டத்தின் பிரகாரம் 2017 ஆண்டின் போது நிறுவனத்தினால் 13 விடயங்களை கணக்காய்வு செய்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் அவற்றில் இரண்டு விடயங்கள் மாத்திரம் கணக்காய்வு செய்திருந்தமையால் நிறுவகத்தில் போதியளவு உள்ளக கணக்காய்வு ஒன்று நடைபெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளரின் படி, கணக்காய்வுப் பிரிவு கணக்காய்வுக் குழுக் கூட்டங்களையும் கணக்காய்வுக்கு இட்டுச் செல்லும் ஏனைய அனைத்து நடவடிக்கைகளையும் நடத்துகின்றது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு மனித வள முன்னேற்ற நிறுவகத்திற்கு மேலதிகமாக 7 நிறுவகங்களில் கணக்காய்வு செய்ய வேண்டியுள்ளது. ஆகையால், உள்ள கணக்காய்வு அறிக்கையில் தங்கியிருக்கின்ற கணக்காய்வு முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வது பெறுமதியற்றதாகும். | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| 6.5 | **தீர்கப்படாத கணக்காய்வு பந்திகள்** | பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படகின்றன. | | | |
| | | (அ) | நிறுவனத்தினால் 2014 ஆண்டின் போது ஊடாக மற்றும் செவிமடுத்தல் பார்வை சார்ந்த வடிவமைத்தல் டிப்ளோமா ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த பாடநெறிகள் நடாத்துவதற்காக நிறுவனத்தில் விஷேடத்துவ அறிவு உடைய விரிவுரையாளர்கள் காணப்படாமையால் 2014 ஆண்டின் பின்னர் பாடநெறிகளுக்காக மாணவர்கள் சேர்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவகம் இயைபுடைய விசேடத்துவத்தில் தகுதிபெற்ற விரிவுரையாளர்களைக் கொண்டிருக்காததன் காரணமாக இந்நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்ற இந்நிறுவனத்தினால் பெறப்படும் நிதிப் பயன்கள் குறைவாக இருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டங்களளுக்குச் சொந்தமான வளங்களை ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கிடையில் பகிர்ந்துகொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. மேலதிக பொருட்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன. | |
| | | (ஆ) | 2014 ஜுன் 01 திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய கலை அரங்கில் நடைபெற்ற டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் விழாவிற்காக பயன்படுத்தப்பட்ட நிறுவனத்திற்கு சொந்தமான ரூபா 69,900 தொகை பெறுமதியான மடிகணினி காணாமல் போயிருந்ததுடன் அது தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டு நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2015.11.27 திகதி ஏற்பட்ட கணணி இழப்பினை விசாரனை செய்வதற்கு ஒரு அங்கத்தவர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. 2017.01.05 ஆந் திகதி வரை அறிக்கை கிடைக்கப்பெறவில்லை. அதேநேரத்தில் கணிணியின் செலவினை மீளப்பெறுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டது. எத்தகைய பதிலும் 2017.01.10 ஆந் திகதி வரை கிடைக்கப்பெறவில்லை. இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு இரண்டு அங்கத்தவர் குழு நியமிக்கப்பட்டு அவர்களது கல்விசார் உத்தியோகத்தர்களின் 399 கூட்டத்திற்கு கருதுதலுக்காகவும் அவசியமான நடவடிக்கைக்காகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |
| | | (இ) | நிறுவகத்தில் நிருவாக மற்றும் கல்வி அலுவல்களுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் அமைந்துள்ள 27.86 பர்சஸ் காணி கொழும்பு பல்களைகழகத்திற்கு சொந்தமானதுடன் அந்த காணியின் உரிமையை உரித்தாக்கி பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மனித வள முன்னேற்ற நிறுவகம் அமைந்துள்ள காணி கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமானது. அது 2019 ஆண்டிலிருந்து கணக்குகளில் காண்பிக்கப்படும். | 2018 கணக்குகளில் ஒரு குறிப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| **7.** | **முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்** | | | | |
| | (அ) | பாதீட்டு கட்டுபாடு | பாதீட்டை அடிக்கடி மீளாய்வு செய்து ஆக்கபூர்வமான கட்டுபாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்படாமை. | எதிர்காலத்தில் இசைவுறப்படும். தொடர்புடைய உத்தியோகத்தர்கள் எதிர்கால செயற்பாடுகளில் பயனுறுதிமிக்க கருவி என்ற வகையில் வரவு செலவுத்திட்ட கட்டுப்பாட்டினை மீளாய்வ செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | |
| | (ஆ) | முதலீட்டு முகாமைத்துவம் | முதலீடுகள் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்காமை. | திறைசேரியிலிருந்து 138 மில்லியனை முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டது. | நிலுவை இருப்புகளிலிருந்த பதிலுக்காக காத்திருத்தல் |
| | (இ) | பெறுகை | பெறுகை திட்டம் நாளதுவரை பேணப்படாமை | | |
| | (ஈ) | வாகனக் கட்டுபாடு | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரிசோதனை செய்யாமை, வாகனங்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்படாமை, வாகனங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளாமை, ஓட்ட அட்டவணைகள் மற்றும் பிரயாணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்புகளில் தகவல்கள் உட்படுத்தப்படாமை. | குறைபாடுகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது |
| | (உ) | பாடநெறிகள் நடாத்துதல் | துணை விதிகள் மற்றும் பிரமாணங்களை அங்கீகரிக்காமல் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருத்தல். | ஆங்கீகரிக்கப்பட்ட நிகழ்சசித்திட்டங்கள் மாத்திரம் தற்போது நடத்தப்படுகின்றன. | அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை மாத்திரிம் நடத்துதல். |